T-UN-360

# சோழமண்டல
# நாணயவியல் கழகம்

## தஞ்சாவூர்.

நாணயமே உலகம்

## இரண்டாம் ஆண்டு விழா
## மலர் - 2002.

# சோழமண்டல நாணயவியல் கழகம்

## தஞ்சாவூர்.

இரண்டாம் ஆண்டு விழா

மலர் - 2002.

தொடர்பு முகவரி:

**மு. துரைராசு, தலைவர்.**
''தமிழ்க்குடில்''
4, முதல் தெரு,
சமால்உசேன் நகர்,
நாஞ்சிக்கோட்டை சாலை,
தஞ்சாவூர் - 613 006.
போன்: 04362 - 356504.

**எச்.ஏ. நசீர், செயலர்**
105, வேதநாராயணன் தெரு,
மானம்புச்சாவடி,
தஞ்சாவூர் - 613 001.
போன்: 04362 - 374370
செல்: 98430 - 55370



**செயலர்**

**சோழமண்டல நாணயவியல் கழகம்**

தஞ்சாவூர்.

## சிறப்புச் செய்தி



1. சோழமண்டல நாணயவியல் கழகத்தின் வளர்ச்சியில் அக்கரை கொண்டு சிறப்பான பங்கினை அளித்து வரும் ''தினமலர்'' ஆசிரியர் நாணயச்செம்மல் அய்யா திரு. ஆர். கிருஷ்ணமூர்த்தி எம்.ஏ., எஃ.ஆர்.என்.எஸ்., அவர்களுக்கு இக்கழகம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளது.

2. இவ்விழாவினை இணைந்து நடத்துவதோடு மட்டுமன்றி அனைத்து வகை உதவிகளையும் வழங்கிய லயன் நண்பர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றோம்.

3. இம்மலர் சிறக்கும் வண்ணம் விளம்பரங்கள் தந்துதவிய ''தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரவை'' உறுப்பினர்களான வணிகப்பெருமக்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

4. இக்கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஆண்டுதோறும் விழாவின் போது வருகை தந்து நாணயசேகரிப்பாளர்களுக்கு பெரிதும் ஊக்கம் தரும் நாணய விற்பனையாளர்களின் ஒத்துழைப்பை பெரிதும் பாராட்டுகிறோம்.

- செயலர்.

# INDEPENDENCE INDIA
## Indian Paper Money
## GOVERNORS OF THE RESERVE BANK OF INDIA



**C.D. DESHMUKH**
**11-4-1943**
**TO 30-6-1949**



**H.V.R. IYENGAR**
**1-3-1957**
**TO 20-2-1962**



**B. RAMARAU**
**1-7-1949**
**TO 11-1-1957**



**P.C. BHATTACHARYA**
**1-3-1962**
**TO 30-6-1967**

**K.G.**
**AMBEGAONKAR**
**11-1-1957**
**TO 28-2-1957**



**L.K. JHA**
**1-7-1967**
**TO 3-5-1970**

B.D.
ADARKAR
4-5-1970
TO
15-6-1970



H.V.R. IYENGAR
1-3-1957
TO 20-2-1962



S. JAGANNATHAN
16-6-1970
TO 19-5-1975

M.
NARASIMHAN
2-5-1977
TO
30-11-1977

N.C.
SENGUPTA
19-5-1975
TO
19-8-1975



DR. I.G. PATEL
1-12-1977
TO 15-9-1982



**DR. MANMOHANSINGH**
**16-9-1982**
**TO 14-1-1985**



**S. VENKITARAMMAN**
**22-12-1990**
**TO 21-12-1992**

**AMITAV**
**GHOSH**
**15-1-1985**
**TO**
**4-2-1985**



**DR. C. RANGARAJAN**
**4-2-1985**
**TO**
**22-12-1990**



**R.N. MALHOTRA**
**4-2-1985**
**TO**
**22-12-1990**



**BIMALJALAN**
**22-11-1997**
**(Continued)**

*Indipendent India*

## INDIAN PAPER MONEY

# LIST OF FINANCE SECRETARIES

| | | | |
|---|---|---|---|
| 1. | K.R.K. MENON | - | 1949 - 50 |
| 2. | K.G. AMBEGAONKAR | - | 1950 - 51 |
| 3. | H.M. PATEL | - | 1951-57 |
| 4. | A.K. ROY | - | 1957 |
| 5. | L.K. JHA | - | 1957 - 64 |
| 6. | S. BOOTHLINGAM | - | 1964 - 67 |
| 7. | S. JAGANNATHAN | - | 1967 |
| 8. | Dr. I.G. PATEL | - | 1968 - 72 |
| 9. | M.G. KAUL | - | 1973 - 76 |
| 10. | Dr. MANMOHAN SINGH | - | 1976 - 80 |
| 11. | R.N. MALHOTRA | - | 1980 - 81 |
| 12. | M. NARASIMHAM | - | 1981 - 83 |
| 13. | PRATAP KISHEN KAUL | - | 1983 - 85 |
| 14. | S. VENKITARAMANAN | - | 1985 - 89 |
| 15. | GOPI KISHEN AURORA | - | 1989 - 90 |
| 16. | BIMAL JALAN | - | 1990 - 91 |
| 17. | S.P. SHUKLA | - | 1991 |
| 18. | MONTEK SINGH AHLUWALIA | - | 1991 - 94 |

# பொருளடக்கம்


1. தலைவர் முகவுரை
2. செயலர் சிறப்புச் செய்தி
3. செயற்குழு உறுப்பினர்கள்
4. வரலாறு படைக்கும் நாணயங்கள் [கவிதை]

   – லயன். ஏ. கந்தசாமி டி.சி.
5. சங்க கால காசுகளில் தோரணவாயில்

   –குடவாயில் பாலசுப்ரமணியன்
6. கரூரில் கிடைத்த இலங்கை நாணயம்

   – சங்கரன் இராமன்
7. இலக்கியத்தில் நாணயங்கள்

   – மா. பவானி
8. களப்பிரரின் ஓர் அரிய பொற்காசு

   – க.ஆ. திருஞானசம்பந்தம்
9. அண்மைக்கால நாணயங்கள் அச்சிடுவதில் தேவைப்படும் சீர்திருத்தம்

   – எஸ். சந்திரசேகரன்
10. பழைய திருவாங்கூர் சமஸ்தான காசுகள்

    – எஸ். சந்திரசேகரன்
11. குடியேற்ற நாடுகளின் நாணயங்கள்

    – எஸ். சந்திரசேகரன்
12. மைசூர் உடையார் வெளியிட்ட காசுகள்–ஒரு வரலாறு

    – லயன். எச்.ஏ. நசீர், செயலர்

13. செல்லாத காசுகள்

- டாக்டர். சோ. தியாகராசன்

14. குதிரைவீரன் காசுகள்

- தி.து.சுந்தரம்

15. மகா அலெக்சாண்டர் உருவ காசு

- தி.து.சுந்தரம்

16. நாணயங்கள் - ஓராய்வு

- லயன். தமிழ்ப்பொறியாளர் சு. குழந்தைவேல்

17. காசு, பணம் பற்றிய பழமொழிகள்

- து. இளந்தமிழன்

18. நாணயவியல்

- ச.தி. சங்கர்

19. ஓபோ (Offa) மன்னன் தலை உருவக்காசு

- எ. முஹம்மது பெரோஸ்

20. நாடுகள்- நாணயங்கள் (Countries- Currencies)

- மு. துரைராசு எம்.ஏ.,

21. Life Members' Address

22. Dealers Name & Address



**நிறுவனர், தலைவர்**
**சோழமண்டல நாணயவியல் கழகம்**
தஞ்சாவூர்.

# முகவுரை

சான்றோர் பெருமக்களே!

சோழமண்டல நாணயவியல் கழகம் எனும் அமைப்பு தொடங்கப்பட்டு கடந்த 2 ஆண்டுகளாக சீரிய முறையில் செயலாற்றி வருகிறது. மாதாந்திர கூட்டங்கள், நாணய பரிமாற்றம், சிறப்புச் சொற்பொழிவுகள், ஆய்வுக் கட்டுரைகள், நாணயக்கண்காட்சி நடத்துதல் ஆகிய பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகிறது.

மூன்றாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இவ்வமைப்பு, இரண்டாண்டுகள் நிறைவினையொட்டி விழாவினையும், கண்காட்சியினையும் விக்டரி லயன்ஸ் கிளப் அமைப்பும் இணைந்து நடத்துவதோடு சிறப்பானதொரு மலரினையும் வழங்குவதில் பெருமை கொள்கிறது. இம்மலருக்குரிய கவிதை, கட்டுரைகள், நாணயங்கள் பற்றிய அரிய செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தந்து உதவி புரிந்த அனைவருக்கும் இந்நாணயவியல் கழகம் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறது.

விக்டரி லயன்ஸ் கிளப் அமைப்பினைச் சார்ந்த திருவாளர்கள் எஸ். முகம்மது ரஃபி, எம்.எஸ். இராமலிங்கம், பி. லெட்சுமணன், என்.எம். குமார், ஏ. கந்தசாமி ஆகியோர் இவ்விழாவினை இணைந்து நடத்த உதவியதோடன்றி தங்களது சிறப்பான பங்கினையும் அளித்தமைக்கு எங்களது மனமார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறோம்.

இவ்விழாவின் வெற்றிக்கு பெரிதும் வழிகோலிய இக்கழகத்தினைச் சேர்ந்த திருவாளர்கள் தீ.து.சுந்தரம், ஜீ.ஆர். ராஜாராமன், தமிழ்ப்பொறியாளர். சு. குழந்தை வேலனார் ஆகியோருக்கும் எங்களது நன்றியினை கடமை உணர்வுடன் உரித்தாக்குகிறோம்.

இவ்விழாவின் அனைத்து ஏற்பாடுகளுக்கும் இரவு, பகல் மற்றும் தன்னலம் பாராது கடுமையாக உழைத்த இக்கழகத்தின் செயலர் திரு. லயன். எச்.ஏ. நசீர் அவர்களின் தொண்டு புகழுரைக்கு அப்பாற்பட்டது. இக்கழகத்தின் செயலர் என்ற பொறுப்பினை நிலை நிறுத்தும் வகையில் அரும்பணியாற்றியமைக்கு இக்கழகத்தின் சிறப்பான பாராட்டுக்கள் அவரைச் சார்ந்தது.

இவ்விழா சிறப்பாக நடைபெற உதவிய இதர நண்பர்களுக்கும் நன்றியை தெரிவிப்பதோடு மலருக்கான பணியில் அயராது ஈடுபட்டு சிறப்பான முறையில் வெளிவர ஒத்துழைப்பு நல்கிய திரு. எஸ். சந்திரசேகரன் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதோடு, இம்மலர் சிறந்த முறையில் அச்சிட உதவிய மாடர்ன் கம்ப்யூட்டர்ஸ் மற்றும் வெற்றிவேல் பிரஸ் நிறுவனத்தார்களுக்கும் எங்களது நன்றியினை உரித்தாக்குகிறோம்.

வளர்க நாணயவியல் கலை!

- தலைவர்.

# சோழமண்டல நாணயவியல் கழகம்

## செயற்குழு உறுப்பினர்கள்



*நிறுவனத் தலைவர்:*
**திரு. மு. துரைராசு**



*செயலாளர்:*
**திரு. Ln. H.A. நசீர்**



*பொருளாளர்:*
**திருமதி. அகஸ்தாமங்களதுரை**



*துணைத் தலைவர்:*
**திரு. S. சந்திரசேகரன்**



*துணைச் செயலாளர்:*
**திரு. V. சாமிநாதன்**

## வாழ்நாள் உறுப்பினர்கள்:



**திரு. Ln. சு. குழந்தைவேல்**



**திரு. தி.து. சுந்தரம்**



**திரு. பா. சுசீந்திரன்**



# வரலாறு படைக்கும் நாணயங்கள்

சித்தாந்த ரெத்தினம்
லயன் A. கந்தசாமி

தாழாது தளராது சேவையாற்றும்
தகுதிநிறை சான்றோரை சேர்த்துவைத்து
சோழ மண்டல நாணயவியல் கழகமாக
தொல்பொருளை ஆய்கின்ற மையமாக
நாணயத்தின் வரலாற்றைக் கண்டறிந்து
நாகரிகம் வளர்ந்த கதை சொல்லவந்தார்.
நாநயமாய்ப் பேசுகின்ற தலைவராக
நல்லாசிரியர் துரைராசு விளங்குகின்றார்.

அன்பிற்குரிய எச். ஏ. நசீர். சுவாமிநாதன்
அகஸ்தா மங்களதுரை சுந்தரனார்
சந்திரசேகரன் என்றும் சான்றோர்களுடன்
சரித்திரத்தின் கதவுகளைத் திறக்கின்ற
அருமையான உள்ளங்களுக்கும் வாழ்த்துக்கள்
அரியநல் செய்திகளைப் பரப்புகின்ற
பெருமை நிறை கண்காட்சிக்கும்; கருத்துக்களின்
பெட்டகமாம் மலருக்கும் வாழ்த்துக்கள்.

அந்தந்த நாடுகளில் நாணயங்கள்
அற்புதங்கள் படைப்பதை அறிந்திடவும்.
பந்தங்களை நாடுதோறும் ஏற்படுத்தும்
பண்பாட்டின் வளர்ச்சியினைத் தெரிந்திடவும்
வரலாற்றுக் கருவூல இருப்பிடமாய்
வளர்ந்து வரும் கழகத்தின் நடைமுறையை
திரளாக அறிஞர்கள் ஒன்றுகூடி
செவிகுளிர கேட்டுஇன்புற வேண்டுமன்றோ.

நாணயங்கள் வரலாற்றுச் சின்னமென
நாடுதோறும் காசுகளைச் சேகரித்து
காணாத மனிதர்களும் அறிந்திடவே
கண்காட்சி நடத்துகின்ற அழகினையும்
சான்றோர்களின் எழுத்துக்களை மையமாக்கி
சரித்திரத்தைக் கூறுகின்ற மலரினையும்
ஆண்டுவிழாப் பரிசுகளாகத் தருகின்ற
அற்புதத்தைப் புகழாத நெஞ்சமுண்டோ?

அச்சடித்த நோட்டுகளின் வரலாற்றை
அடுக்கடுக்காய்த் திரும்பிநாம் பார்க்கையிலே
எத்கைய மாற்றங்கள் நிகழ்ந்ததென
எண்ணியெண்ணி வியந்துநாம் மகிழ்ந்ததுண்டு
சிறிதாக இருக்குதென அஞ்சல்தலை
சிந்தையிலே எளிதாக நினைப்பதுண்டு
நிறைவான வரலாற்றின் பின்னணிக்கு
நிரந்தரமான அழியாத சின்னமன்றோ!

நாடாளும் ஆட்சியாளர் காலங்களில்
நாணயங்கள் எடுக்கின்ற அவதாரம்
ஏடாளும் சான்றோர்க்கு ஆவணமாம்
எழுதுகின்ற வரலாற்றின் அடித்தளமாம்
நாணயத்தைத் தேடிஓடும் தேனீக்கள்
நாள்தோறும் ஆராய்ந்து செய்திடும்
நாணயவியல் கழகத்தின் உறுப்பினர்களை
நாவார நாடுபோற்ற வாழியவே!

★★★★

# சங்க கால காசுகளில் தோரணவாயில்

**-குடவாயில் பாலசுப்ரமணியன்**

இந்தியக்கலை மரபில் வாயில்கள் என்பவை தனித்தன்மையுடையவையாக மதிக்கப்பெற்றது.

இல்லங்களின் வாயில்கள், அரண்மனை வாயில்கள், திருக்கோயில் வாயில்கள், நகர வாயில்கள், கிராம வாயில்கள் ஆகியவற்றைப் புனிதமான இடங்களாகக் கருதினர். எனவே அங்கு அமைக்கப்படும் வாயில்களில் தெய்வப்படுத்துதல் என்பதும், பசுக்களின் நுழைவால் புனிதப்படுத்துதல் என்பதும் முக்கிய நிகழ்வுகளாக அமைந்தன. வேதகாலத்து கிராம நிர்மாண அமைப்பிலும், பின்பு பௌத்தம் செழித்தோங்கிய காலத்தில் ஸ்தூபங்கள் அமைக்கப்பெற்ற இடங்களிலும் தோரணவாயில்கள் அமைத்தனர். மரம், மூங்கில்கள் அல்லது கற்கள் கொண்டு தோரணவாயிலமைப்பை உருவாக்கினர். தொடக்க காலத்தில் அமைந்த தோரணவாயில்கள் காலப்போக்கில் நுழைவாயிற்கட்டடங்கள் அல்லது கோபுரவாயில்களாக வளர்ச்சி நிலை அடைந்தன. அத்தகு கட்டடங்களைச் சங்க இலக்கியங்களும் பெருங்கதை போன்ற நூல்களும் ''வாயில் மாடம்'' என்ற பெயரால் குறிப்பிட்டன.

தோரணவாயில்களாயினும் அல்லது வாயின்மாடம் எனும் நுழைவாயிற்கட்டடங்களின் நிலைகளிலும் தெய்வப்படுத்துதல் என்பது முக்கிய சடங்காகும். கோயில்களின் வாயில் நிலைகளிலும், அரண்மனை வாயில் அல்லது தனிஇல்லங்களின் வாயில்நிலைகளிலும் கர்ப்ப பாத்திரம் எனும் உலோகபாத்திரத்தில் நவமணிகளையும், தங்கம், வெள்ளி போன்ற உயர்ந்த உலோகங்களையும், நவமணிகளையும் நவதானியங்களையும் இட்டுநிரப்பி, அப்பாத்திரத்தை நிலைக்காலின் கீழ்ப்புதைத்து புனிதச்சடங்குகள் செய்வதை சிற்ப, கட்டட ஆகம நூல்கள் கூறுகின்றனர். இதனை 'கர்ப்பநியாசம்' என்றும் கூறுகின்றன.

வளமைக்கு எடுத்துக்காட்டாகத்திகழும் நவமணிகள், நவதானியங்கள், பஞ்ச உலோகங்கள், புனிதத்துவம் பெற்ற தர்ப்பை ஆகியவற்றுடன் நியாசம் செய்வதால் அவ்வாயில்கள் அமைந்துள்ள இடம் வளமை கொழிக்கும் இடமாகத்திகழும் என்பது நம்பிக்கையாகும்.

வாயில்களில் தெய்வப்படுத்துதல் என்பது பல்லாயிரம் ஆண்டுகளாகத்தொடரும் மரபாகும். நிலைவாயில்களின் மேல் இரண்டு யானைகள் நீர்க்குடத்தை துதிக்கையில் ஏந்திச்சொரிய நடுவே தாமரை மலரின்மேல் திருமகள் வீற்றிருப்பதாகத்திகழும். உருவத்தை அமைப்பர். அங்கு திருமகள் உருவம் அமைப்பதால் அந்த இடத்தில் செழுமைமிகும் என்பது நம்பிக்கையாகும்.

இவ்வாறு அமைக்கப்பெறுகின்ற நீர்ப்பாத்திரம் ஏந்திய இருயானைகளும் கருத்த சூல்கொண்ட மேகங்களின் உருவமாகும். சூல்கொண்ட மேகங்கள் மழை பொழிவதே கலசங்களிலிருந்து சொரியப்படும் நீராகும். அம்மழையால் வளம்மிகுந்த இடத்தில் நீர்நிரம்பி நீர்நிலைகளாகமாறி அங்குத் தாமரை மலரும் என்றும், அவ்வாறு மலருகின்ற தாமரையில்திருவாகிய தெய்வம் உறைவாள் என்பதே நிலைகளின் மேற்பகுதியில் அமைக்கப்பெறும் கஜலட்சுமி அமைப்பின் தத்துவமாகும்.

சில வாயில் நிலைகளின் இருபுறமும் சங்கநிதி, பதுமநிதி என்ற இரு தெய்வங்களின் உருவங்கள் அமைப்பதும் பண்டைய மரபாகும். அத்தெய்வங்கள் கையில் முறையே சங்கு, பத்மம் (தாமரை) ஆகியவற்றை ஏந்தி இருக்கும். நவநிதியங்களில் சங்கநிதியும், பதும் நிதியும் இவ்வாறு வாயில்களில் தெய்வப்படுத்தப்படுவதால் அவ்வாயில்களின் வழியே நுழைவோர் அனைவர்க்கும் அத்தெய்வங்களின் அருளால் திரு எனும் இலக்குமியின் கருணையும், நவநிதியங்களின் சேர்க்கையும் கிட்டும் என்பது நம்பிக்கையாகும். திருக்கோயில்களின் வாயில் நிலைகளில் கங்கை, யமுனை ஆகிய தெய்வங்களின் உருவங்களை அவமப்பர். இவற்றால் அவ்வாயில் வழியே செல்வோர் புனிதப்படுத்தப்படுகின்றனர் என்பது ஆகம சிற்பநூல்களின் கூற்றாகும்.

சிவாலயகோபுர வாயில்களில் துர்க்கை, பைரவர், அதிகாரநந்தி, நாகராஜா ஆகிய தெய்வஉருவங்களை அமைப்பதோடு நந்தி, மகாகாளன் எனும் வாயிற்காப்போம். (துவாரபாலகர்) சிற்பங்களை இடம் பெறச்செய்வர். வைணவ ஆலய வாயில்களில்ஜெயன், விஜயன் என்ற வாயிற்காவலர்களோடு கணபதி, நாகராஜா ஆகியோர் உருவங்களும் இடம்பெற்றிருக்கும். பிற்காலத்தில் சிவாலய வாயில்களில் முருகன், கணபதி ஆகியோருக்கு சிறு கோயில்கள் அமைத்தனர். சமணம், பௌத்தம்,சைவம், வைணவம், சாகதம், காணாபத்யம், சௌரம், கௌமாரம் எனும் எந்த சமயத்திற்குரிய கோயில் வாயிலாயினும் அங்கு தெய்வப்படுத்துதல் என்பது முக்கியத்தும் பெற்றிருந்திருக்கிறது.

புனிதத்தன்மையும், தெய்வங்கள் இடம் பெற்றதுமான வாயில்களைத் தாங்கள் வெளியிட்ட காசுகளில் இடம்பெறச்செய்தவர்கள் சங்ககாலக் சேரமன்னர்களே ஆவர். தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையைச்சார்ந்த பரணன் என்பவருக்கு கிடைத்த சேரமன்னன் காசு ஒன்றில் அவனது பெயர் பொறிக்கப்பெற்றிருந்ததோடு, தோரணவாயில் ஒன்றும், அதன் கீழ் அம்மன்னனின் உருவமும் காணப்பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**சங்ககாலச் சேரன் கொல்லிப்புறை காசு**

முன்புறம்



கொல் ஈபுறை என்ற தமிழ்
எழுத்துப் பொறிப்பும்
தோரண வாயிலின் கீழ்
மன்னன் உருவமும்

பின்புறம்



வில் அம்புச் சின்னம்

வரலாற்று சிறப்புவாய்ந்த அக்காசின் ஒருபுறம் ''கொல் ஈபுறை'' என்ற ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் எழுத்துப்பொறிப்பும், நடுவே தோரணவாயில் ஒன்று திகழ அதன் கீழ் கையில் வாளேந்திய நிலையில் அவ்வரசனின் உருவரும் காணப்பெறுகின்றன. காசின் பின்புறம் வில் அம்பு உருவங்கள் பெரிதாகத்திகழ அருகே மலைமுகடு, நீரில் காணப்பெறும் இரு மீன் உருவங்கள் ஒரு சதுரத்திற்குள் புலி, கீழே நந்திபாதம் ஆகியவை உள்ளன. இக்காசினை ஆராய்ந்த டாக்டர். இரா. நாகசாமி



கொல்லிமலையைக் கைப்பற்றிய கோப்பெருஞ்சேரல் இரும்பொறை எனும் சேர அரசன் வெளியிட்ட காசு என முடிவுகண்டுள்ளார். சங்கஇலக்கியங்களில் பெருமையுடன் பேசப்பெறும் சேரப்பெருஞ்சேரல் இரும்பொறையன் புனிதம்மிக்க தோரண வாயிலின் கீழ்நிற்பதை இக்காசில் நாம் காணமுடிகிறது. இது போன்றே தினமலர் ஆசிரியர் இரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தோரணவாயிலின் கீழ் நிற்கும் மேலும் சில சேரமன்னர்களின் உருவம் பொறித்த காசுகளைப்பற்றி ஆராய்ந்து நூல்களில் குறிப்பிட்டுள்ளார். இவற்றின் வாயிலாகப் புனிதத்தன்மையும், தெய்வத்தன்மையும் உடையதாகிய தோரணவாயில்களைத் தங்கள் காசுகளில் பொறிப்பதை சேரமன்னர்கள் பெருமையாகக் கொண்டனர் என்பதறிகிறோம்.

# செஞ்சி நாயக்கரின் அரிய தமிழ்க்காசு

ஆறுமுக சீதாராமன், தஞ்சை.



முன்பக்கம்



பின்பக்கம்

காசின் எடை : 1.750 கிராம்.

கிடைத்த இடம் : செஞ்சி

உலோகம் : செம்பு

முன்பக்கத்தில் பீடத்தின் மேல் கருடஸ்தம்பம் ஒன்று உள்ளது. இடது பக்கத்தில் சங்கு, பிறை, சக்கரம் உள்ளன. பின்பக்கத்தில் 'கெ(ா)ண்டப்ப'என்று மூன்று வரிகளில் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு தமிழ்எழுத்துகளில் உள்ளது.

## கொண்டம நாயக்கர்: (கி.பி. 1580 - 1594)

செஞ்சி நாயக்கர்கள் கொள்ளிடத்துக்கும், பாலாற்றுக்கும் இடைப்பட்ட பகுதியை ஆண்டனர். திருப்பரங்குன்றத்திலுள்ள (மதுரை) இரண்டு கல்லெழுத்துச் சாசனங்களில் செஞ்சிநாயக்க மன்னர்களின் வம்சாவளி குறிக்கப்பெற்றுள்ளது. அதில் மணிநாகபுரம் காசிப கோத்திரம் வையப்பநாயக்கர் குறிக்கப் பெறுகின்றார். இந்த வையப்ப நாயக்கருக்கும் கொண்ட ஜம்மா தேவிக்கும் பிறந்தவரே செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கராவார். இவரது மகன் கொண்ட நாயக்கராவார். கொண்டம நாயக்கரின் சிதம்பரம், ஸ்ரீ முஷ்ணம் கல்வெட்டுகள் இவரது தந்தை, பாட்டன் ஆகியோர் பெயர்களை இணைத்து ''வையப்ப கிருஷ்ணப்ப கொண்டம

நாயக்கர்''

என்றே இவரைக் குறிப்பிடுகின்றன. இவருக்கு இரண்டாம் கிருஷ்ணப்பர் என்ற பெயரும் உண்டு. கொண்டம நாயக்கர் தில்லையில்தீட்சிதர்களின் எதிர்ப்பைப் புறக்கணித்துவிட்டுக் கூத்துப் பெருமான் ஆலயத்தில் சீரமைப்பும் பணிகளைச் செய்தார்.

தெலுங்கு மொழியில் நாயக்கரின் பெயரைச் சொல்லப் போனால் 'கொணடம' என்றும் தமிழ்மொழியில் நாயக்கரின் பெயரைச் சொல்லப்போனால் 'கொண்டப்ப' என்றும் கூறுவதே பொருத்தமாக உள்ளது. அதனால் காசில் தெலுங்கு மொழியில் கொண்டம் என்று பொறிக்காமல் 'கொண்டப்ப' என்று தமிழில் பொறித்துள்ளனர்.

விருத்தாச்சலம் விருதகிரீசுவரர் கோயிலில் கொண்டம நாயக்கரின் திருஉருவமும், மனைவி லட்சுமி அம்மன் உருவமும் நேருக்கு நேர் கடவுளை வணங்கும் கோலத்தில் உள்ளனர்.

# கரூரில் கிடைத்த இலங்கை நாணயம்

**சங்கரன் இராமன்**
சென்னை.

கடந்த 10 வருடங்களுக்கு மேலாக கரூரில் உள்ள அமராவதி ஆற்றுப் படுகையில் சங்க காலம் முதல் கிழக்கிந்திய கம்பெனியார் காலம் முடிய பல மன்னர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களும், பல வெளி நாட்டினர் (கிரீக், ரோமன், சைனா, இலங்கை) வெளியிட்ட நாணயங்களும் கிடைத்துள்ளன. அவ்வாறு கிடைத்த ஒரு செப்பு நாணயத்தைப் பற்றி ஆய்வு செய்வதே இந்த கட்டுரையின் நோக்கம் ஆகும்.

நாணயத்தின் முன்பக்கம் நின்ற நிலையில் யானை அதற்கு மேல் வட்ட வடிவம் ஒன்று உள்ளது. அந்த வட்ட வடிவம் சூரியனின் வடிவம் என்று கருதலாம்.

நாணயத்தின் பின்பக்கம் அமர்ந்த நிலையில் ஒரு நந்தி, அந்த நந்தியின் திமில் உயர்ந்தும் அதன் முன் கால்களில் ஒன்று முன்புறம் நீண்டும், மற்றொரு கால் பின்புறம் மடித்தும் காணப்படுகிறது. காளையின் மேல் பகுதியில் நாணயம் உடைந்து உள்ளது.

மிகவும் தொன்மையான நாணயம் என்று கருதப்படும் முத்திரை நாணயங்களிலும், அதற்கு பிறகு தமிழ் நாட்டில் கிடைக்கும், சங்ககால மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களிலும், பல்லவர், பிற்காலச் சோழர், பாண்டியர், சேரர் மற்றும் விஜயநகர மன்னர்கள் வெளியிட்ட நாணயங்களிலும் யானை உருவம் ஒரு முக்கிய இடம் பெற்றுள்ளது.

இப்போது கிடைத்துள்ள நாணயத்தில் இருக்கும் யானையின் உருவத்திற்கும், சங்ககால நாணயத்தில் உள்ள யானையின் உருவத்திற்கும் பல மாற்றங்களை நாம் காணமுடிகின்றது.

நாணயத்தின் பின்பக்கம் உள்ள நந்தி உருவம் அமர்ந்த நிலையில் உள்ளது. ஆனால் தமிழ் நாட்டில் கிடைத்த சங்ககால

நாணயங்களிலும், அதற்கு பிறகு வந்த பல்லவ மன்னர்களின் நாணயங்களிலும் காளை உருவம் நின்ற நிலையிலேயே காணப்படுகிறது.

இலங்கையில் கிடைக்கும் பல்லவர் நாணயங்களிலும் சிங்கை நகர் கால நாணயங்களிலும் உள்ள நந்தி உருவம் அமர்ந்த நிலையில் உள்ளது. நாம் ஆய்வு செய்யும் நாணயங்களில் உள்ள நந்தி உருவத்திலும் இலங்கையில் கிடைத்த சிங்கை நகர் கால நாணயத்தில் உள்ள நந்தி உருவத்திலும் பல ஒற்றுமைகளை காணமுடிகிறது. இந்த உருவ ஒற்றுமையினால் ஆய்வுக்குட்பட்ட நாணயம் இலங்கையில் வெளியிடப்பட்ட நாணயமாக கருதலாம்.

சிங்கை நகர் கால நாணயங்களில் ஒரு பக்கம் அமர்ந்த நிலையில் நந்தியும் மறுபக்கம் இரண்டு அல்லது மூன்று மீன்களின் உருவமும் காணமுடிகின்றது.

தமிழ் நாட்டில் இருந்த பாண்டிய மன்னர்களின் தொடர்பின் காரணமாக மீன் சின்னத்தை பயன்படுத்தி உள்ளனர். இந்த ஆய்வுக்கு பயன்பட்ட நாணயத்தில் உள்ள யானை உருவத்துக்கு பதிலாக சிங்கை நகர் கால மன்னர்கள், மீன் சின்னத்தை பொறித்து வெளியிட்டிருக்கலாம் என்ற கருத்துக்கு வரமுடிகின்றது. சிங்கை நகர் காலம் கி.பி.10-11 ஆம் நூற்றண்டுகளாயிருப்பதால் இப்பொழுது கிடைத்த நாணயம் கி.பி.10 ஆம் நூற்றண்டின் இறுதியில் வெளியிடப்பட்ட நாணயம் என்று கருத வாய்ப்புள்ளது.

சிங்கை நகர் கால நாணயத்தில் உள்ள நந்தி உருவம் இரண்டு குத்து விளக்குகளின் நடுவிலும், ஒரு பீடத்தின் மேல் அமர்ந்தது போலும் உள்ளது. இக்காலத்திற்குப் பிறகு இது போன்ற நாணயங்கள் தான் கிடைக்கின்றன. இப்பொழுது கிடைத்துள்ள நாணயத்தில் நந்தி உருவம் மட்டும் தனியாக உள்ளதால், இந்த நாணயம் சிங்கை நகர் கால நாணயத்திற்கு முன் வெளியிடப்பட்டு இருக்கலாம் என்றும் கருத்தை உறுதி செய்கின்றது.

இப்பொழுது இலங்கையில் உள்ள அரசியல் காரணங்களால் அங்கு வெளியாகும் நாணயங்களைப் பற்றிய கட்டுரைகள் நமக்கு கிடைக்கப் பெறவில்லை. இலங்கை நாணயங்களைப் பற்றி மற்ற

நாட்டில் கிடைக்கும் தகவல்களைக் கொண்டுதான் இந்த முடிவுக்கு வரமுடிந்தது. இந்த நாணயத்தைப் பற்றி இப்பொழுதுதான் முதன் முறையாக தகவல் கிடைப்பதால் இந்த நாணயம் ஒரு அரிய நாணயம் என்று நாம் கொள்ள வேண்டியுள்ளது.



முன்பக்கம்



பின்பக்கம்

சிங்கைநகர் காசில் உள்ள நந்தி உருவம்:



கட்டுரைக்கு பயன்பட்ட புத்தகங்கள் :

1. ''தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு'' ப. புஷ்பரட்ணம்- 2000.

2. '' இலங்கை தமிழரின் பண்டைய கால நாணயங்கள் '' காலநதி பரமு. பஷ்பரட்ணம்-2001

3. "Ceylon Coins & Currency" H.W. CODRINGTON-1924.

# இலக்கியத்தில் நாணயங்கள்

**மா. பவானி**
முனைவர் பட்ட மாணவி
கல்வெட்டியல்துறை
தமிழ்ப்பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 005.

காசு, காணம், பொன் போன்ற தொடர்கள் சங்க காலம் முதற்கொண்டே பயின்று வந்துள்ளன. சங்க இலக்கியத்தில் பயின்று வருகின்ற காசு என்ற சொல் நாணயத்தைக் குறிக்கவிலலை. இவை பெரும்பாலும் காழ் பெயல் அல்குல் காசு[1] என்று அணிகலன் தொடர்பு கொண்டு வருகிறது. காணம். பொன் இவ்விரு பதங்களும் நாணயங்களை குறிக்கப் பயன்பட்டுள்ளன[2]. இதற்கு அடுத்த பதினெண் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றான நாலடியாரில் காணம் என்ற பதம் தொடர்கிறது[3]. அதன்பிறகு கி.பி. ஏழாம் நூற்றாண்டு பக்தி இலக்கியமான தேவாரத்தில்தான் ''காசு'' என்பது நாணயம் என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது[4]. இதற்கடுத்து கி.பி. 16,17 ஆம் நூற்றாண்டு இலக்கியமான திருப்புகழ், பணவிடுதூது போன்ற இலக்கியங்களில்தான் காசு என்பது நேரிடையாக நாணயமாகக் குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த அனைத்து இலக்கியங்களிலும் பிந்தைய காலத்தைச் சேர்ந்த நிகண்டுகளிலும் காசு என்பதற்கு மணி, குற்றம் என்றே பொருள் கூறப்பட்டுள்ளது. கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டு நிகண்டுகளான திவாகரம், பிங்கலந்தை இவற்றிலும் மனவுங்காசு மணியின் பெயர்[5], குற்றமும் மணியுங் கோழையுங்காசே[6] என்று இதே பொருளிலேயே கையாளப்பட்டு உள்ளது. இவ்விலக்கியங்களை அடிப்படையாக வைத்து கட்டுரை எழுதும் ஆசிரியர்களும் சங்க இலக்கியத்தில் இடம் பெறும் காசு என்பதை மணி என்றும், மணிக்காசு என்பதை கல்மணி என்றும் பொருள் கொண்டுள்ளனர்[7].

ஆனால் தேவாரப்பதிகத்தில்[8] ''பாடிப்பெற்ற பரிசில் பழங்காசு'' என்ற பாடல் வரியில் வரும் ''பழங்காசு'' என்ற பதம் கூர்ந்து நோக்கத்தக்கது. இப்பக்தி இலக்கியம் ஏறத்தாழ கி.பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. எனவே இதற்கு முந்தைய காலங்களில் (சங்க இலக்கியங்கள்) ''காசு'' நாணயமாக இருந்திருப்பதையே இப்பதம் சுட்டுகிறது என ஊகிக்கலாம். காணம் என்பதற்கு பழங்காசு என்று சீவகசிந்தாமணி பொருள் உரைக்கிறது[9]. இது உரையாசிரியரின் மொழியாக்கமாகும். எனவே காசு என்பது மணி என்ற பொருளில் மட்டுமே கையாளப்பெற்றுள்ளது என்று கூற இயலாது. காசு என்பதற்கு நாணயம் என்ற பொருளும் அக்காலம் தொட்டே இருந்துள்ளது. அவை இலக்கியங்களில் நேரிடையாக குறிக்கப்படவில்லை. இலக்கியத்தில் இடம் பெறாததால் அப்பொருள் இல்லை என்று நாம் உரைக்க இயலாது. இலக்கியங்கள் அவற்றை இயற்றுபவரின் சூழலையும், நோக்கையும் பொறுத்தது.

அக்கால மக்கள் நாணயமாற்றை விட பண்டமாற்றையே அதிகம் விரும்பி உள்ளனர் என்பதற்கு பெரும்பாணாற்றுப்படை பாடல் வரிகள் சான்றாக உள்ளன[10].

ஆய்மகள் நெய் விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாடு பொறூஉம்

நெய்யிற்கு விலையாக பசும் பெற்கட்டிகளை கொடுத்தால் கூட வாங்காத ஆய்மகன் எருமை, பசு இவற்றையே ஏற்பாள் என்பதிலிருந்து, இச்சூழலில் பண்டமாற்றே பெரிதும் வழங்கிலிருந்ததால் நாணயமாற்று குறித்து கூறும் தேவை அவர்களுக்கு இல்லாதிருந்திருக்கலாம். மேலும் இப்பாடல் வரியில் ''கட்டிபசும்பொன்'' என்பதும் குறிப்பிடத்தக்கது. இடைக்காலத்தில் கழஞ்சு எடையில் கொடுக்கப்பட்டிருக்கும் பொன்வகை நாணயங்கள் கட்டிகளாகவே இருந்திருக்கும் என்ற கருத்திற்கு சங்ககாலம் தொட்டே இக்கட்டிகள் பரிவர்த்தனையில் பயன்பட்டுள்ளமை துணை நிற்கின்றன.

காசு பெரும்பாலும் அணிகலனுடனேயே தொடர்புடையதாக வருவதால் இவற்றை நாணயம் இல்லை என்று உரைக்கின்றனர். நாணய வடிவில் இல்லாவிட்டாலும் ஆபரணங்களை மாற்றிற்கு

பயன்படுத்தியிருப்பதை அறியமுடிகிறது. இவற்றை நாணயம் என்று உரைப்பதும் தவறாகாது. ஏனெனில் இந்தியாவின் துவக்ககால நாணயமாக '' நிஷ்கம்'' எனப்பட்ட கழுத்தணிகளே பயன்பட்டுள்ளன. இன்றும் கூட சவரன் **(Sovereign)** என்பதை நாணயம் என்று கருதுவதை விட அணிகலன் என்றே கருதுகின்றோம்.

எனவே காசு என்ற சொல் நாணயத்தைக் குறிக்கவும் அக்காலம் தொட்டே பயன்பட்டுள்ளது. ஆயினும் அக்கால இலக்கியங்கள் அப்பொருளில் அவற்றைக் குறிக்கவில்லை. இலக்கியங்களில் மட்டுமின்றி பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டு நிகண்டுகளில் கூட காசு, நாணயம் என்ற பொருளில் குறிப்பிடப்பெறவில்லை என்பதும் இங்குச் சுட்டத்தக்கது. பெரும்பாலும் நாணயங்களின் பெயர்கள் துவக்க காலத்தில் அவற்றின் எடைகளையும் உலோகங்களையும் அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளன[11].

'கார்ஷாபணம்' என்ற வேர்ச்சொல்லிலிருந்தே அக்ஷம், பணம் போன்ற நாணயப் பெயர்கள் வந்துள்ளன. அதுபோலவே கார்ஷம் என்பதிலிருந்தே காசு வந்திருக்கக்கூடும். 'கஹாப்பணா' என்ற இலங்கைச் சொல்லும் கார்ஷாப் பணத்திலிருந்தே வந்திருக்கக்கூடும். இக்கஹாப்பணா என்பதிலிருந்தே தமிழ் காணம் வந்திருக்கவும் வாய்ப்புகள் உள்ளன.

அதுபோல் பொன் என்ற பதம் முதலில் உலோகத்தையே உணர்த்தியுள்ளது. இதுவும் நாணயவடிவில் இல்லையாயினும் பரிவர்த்தனைகளில் செலாவணியாக பயன்பட்டுள்ளது. கட்டிகளாக **(ingots)** இருந்துள்ளன என்பதற்கு சங்க இலக்கியங்களும், தேவாரப்பாடல்களுமே சான்றுகளாக உள்ளன[12].

நன்பாட்டு புலவனாய்ச் சங்கமேறி

தற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்

பொன் கட்டிகளாக இருந்ததினால் அவற்றை துணியில் கட்டி முடிச்சுகளாக கொடுத்திருப்பதை மேற் சுட்டிய தேவாரப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன. இடைக்கால கல்வெட்டுக்களில் பொன்வகை, கழஞ்சு என்ற எடையில் குறிக்கப்பட்டிருப்பதுவும், ஆவணங்கள் பலவற்றில் கிழி கை செலவறக்கொண்டு என்ற வாசகங்கள் இடம்பெறுவதும் சங்க காலத்தில் தொடங்கி இடைக்

காலத்திலும் தொடர்ந்து பொற்கட்டிகள் பயன்பட்டுள்ளதை அறிய உதவுகிறன்றன.


1. நற்றிணை 66:9,274:4

2. கலனணிகவென்று ஒன்பதுகா பொன்னும் நூறாயிரம் காணமும் பரிசிலாக காக்கை பாடினியார் நச்செள்ளையார்க்கு நெடுஞ்சேரலாதன் கொடுத்ததாக பதிற்றுப்பத்து உரையில் உள்ளது.

3. நாலடியார், காமத்துப்பால் பாடல் என்: 38.

4. தேவாரம், அடங்கன் முறை, ஐந்தாம் திருமுறை ஐம்பதாம் பதிகம், பாடல் எண்: 5733

5. திவாகரம், பாடல் எண்: 1029

6. பிங்கலந்தை, பாடல் எண்: 1219

7. **K. Rajan, "Mani,Kacu,and kanam An Explanation", SSIC vol.10,2000, pp. 114-118.**

8. தேவாரம், மு.கு. நூ. பாடல் எண். 5733.

9. சீவக சிந்தாமணி, பாடல் எண் : 591

10. பெரும்பாணாற்றுப்படை, பாடல் வரி 162.165

11. **H.W.Codrington, Ceylon Cions and Currency, Memoirs of the Colombo Museum, Acting Governmwnt Printer, Ceylon, 1924,pp.1-8**

12. பெரும்பாணாற்றுப்படை, பாடல் வரி: 162.165.

# பின்னிணைப்பு 2.2
## இலக்கியத்தில் நாணயங்கள்

| காலம் நூ, | நோக்கீடு | பாடல் | நாணயப் பெயர்கள் | பொருள் |
|---|---|---|---|---|
| சங்க காலம் கி.மு. 3 கி.பி. 3 | நற்றிணை 66:9: 27:4:4 | காழ் பெயல் அல்குல் காசு முறைத்திரியினும் பொன்செய் காசின் ஒண்பழம் தாஅம் | காசு பொன் | அணிகலன் ,, |
| ,, | குறுந்தொகை 66:4:1483 | பொலங்கல ஒரு காசு ஏய்க்கும் தவளை வாஇய பொலம் செய் கிண்கிணிக் காசின் அன்ன போது ஈ கொன்றை | காசு | ,, |
| ,, | ஐங்குறுநூறு 310:1 | பொலம் பசும் பாண்டிற்காசு நிறை அல்குல் | காசு | ,, |
| ,, | அகநானூறு 293:7: 315:12 | மணிக்காசு அன்னமால் நிற இருங்கனி | மணிக்காசு | ,, |
| ,, | புறநானூறு 353:2 | பொலஞ்செய் பல்காசு அணிந்த அல்குல் | ,, | ,, |
| ,, | பதிற்றுப்பத்துப் பதிகம் 5 | காசறு செய்யுட் பரணர் | ,, | குற்றம் |
| ,, | பதிற்றுப் பத்துப் பதிகம்6:8 | கலனனிக வென்று 9 காப் பொன்னும் 100 ஆயிரம் காணமும் பரிசிலாக | காணம் | நாணயம் |
| ,, | பதிகம்:9 | ஒன்பது நூறாயிரம் காணமும் அரசுக்கட்டிலும் வகையின் முப்பத்தீராயிரம் காணம் கொடுத்து | ,, | ,, |
| கி.பி. 4.5 | திருமுருகாற்றுப் படை:16 | பல்காசு நிறைந்த சில் காழல்புல் | காசு | அணிகலன் |
| ,, | சிலப்பதிகாரம் 1.2.75 | காசறு விரையே | ,, | குற்றம் |
| ,, | மணிமேகலை 24:260 26:69 | கணமிலிக் கையெதிர் கோடலும் காசில் பூம்பொழில் | காணம் காசு | நாணயம் |

| | | | | |
|---|---|---|---|---|
| கி.பி. 4,5 | நாலடியார் காமத்துப்பால் 38 | செங்கோட்டின் மேற் காணமின்மையாள் மேவா தொழிந்தாளே | காணம் | நாணயம் |
| கி.பி.7.8 | தேவாரம் அடங்கன் முறை பாகம் 1.2 ஐந்தாம் திருமுறை பதிகம் 50,பாடல் எண்.5733 | பாடிப் பெற்ற காசில் பழங்காசு வாடி வாட்டந்தவிர்பார-வரைப்போல் | பழங்காசு | நாணயம் |
| | முதல் ஒன்றாம் திருமுறை பதிகம் - 92, பாடல் எண்-992-993 | வர்சி தீரவே காசு நல்குவீர் மாசின் மிழலையர் ஏசலில்லை இறைவராயினீர் மழைகொள் மிழலையர் கறை கொள் காசினை முறைமை நல்குமே | காசு | ,, |
| | திருமுறைபதிகம் -5,பாடல், 7266 | | கணம் | ,, |
| | சுந்தரர் தேவாரம் திருவிழி மிழலைபதிகம் :8 தேவாரம் அடங்கன் முறை பாகம்:2 ஏழாம் | நெய்யும் பாலும் தயிருங் கொண்டு நித்தல் பூசனை செய்யலுற்றார் கையி-லொன்றும் காணமில்லை | காசு | ,, |
| கி.பி.9 | திருவாசகம் 8:9:4 | காசு அணிமின்கள் உலக்கை எல்லம் காம்பு அணிமின்கள் கரை உறவை | காசு | அணிகலன் |
| கி.பி.9. 10 ஆம் நூ. | திரு மாளிகைத் தேவர் முதலான ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பா திருப்பல்லாண்டு | பாடலங்காரப் பரிசில் காசு அருளி | ,, | நாணயம் |
| கி.பி. 9, 10 ஆம் நூ | நாலாயிர திவ்வியப் பிரபந்தம் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| கி.பி.9, | பாடல்:99<br>பாடல்:349<br>பாடல்:369<br>பாடல்:381<br>பாலடல்:480<br>பெருங்கதை | அஞ்சப் பணத்தின் மேல்<br>பாய்ந்திட்டருள் செய்த<br>முறியாழியுங் காசுங் கொண்டு<br>விருப்பமொரு கொன் வழங்கும் | பணம்<br>காசு பொன் | பாம்பின்<br>படம்.<br>அணிகலன்<br>மணி |
| 10 ஆம்<br>நூ<br>கி.பி.9. | உவந்தவை<br>உஞ்சைக்<br>காண்டம்<br>பாடல்வ்ரி:95<br>பாடல்வரி<br>:147<br>பாடல்வரி:73<br>படைத்தலை<br>க்கொண்டது<br>பாடல்வரி:48<br>பாடல்வரி<br>:182<br>பாடல்வரி<br>:259<br>மருத<br>நிலங்கடந்தது<br>பாடல்வரி<br>:108<br>பாடல்வர்<br>:110<br>பாடல்வரி<br>:129<br>பாடல்வரி<br>:164<br>சீவக | பல் காசு நிறை இய வல்குல்<br>வெண்டுகில் புனைந்தேந்தல்<br>குற் காசு புதையாது<br>மங்கை மகளிர் பைங்கா<br>சரவமும்<br>நீர்மைப் பல்காசு நிழலு<br>மிழந்திமைப்ப | காசு | மணி<br>அணிகலன் |
| 10 ஆம்<br>நூ | சிந்தாமணி<br>பாடல்:2064<br>பாடல்:2068<br>பாடல்:3136<br>பாடல்:591<br>பாடல்:1117 | தங்கலுழ் மேனி யல்குற்<br>காசுடன் கட்டியினலரிசியும்<br>புழுக்குங் காணமும் பன் மலர்க்<br>கிடங்கு சூழ் பசும் பொற்பாம்புரி<br>செம்பொன் பன்னிருக் கோடி | காசு<br>பைம்பொன்<br>காணம்<br>செம்பொன் | அணிகலன்<br>பொன்<br>நாணயம்<br>(பழங்காசு) |

| | | | | |
|---|---|---|---|---|
| | பாடல்:1933<br>பாடல்:1250<br>பாடல்:2079<br>பாடல்:1117 | செம்பொன் பன்னிருக்<br>கோடி யுய்த்துக்<br>கத்துகள் | | |
| கி.பி.9 | திவாகரம்<br>தொகுதி-2<br>பாடல்வரி<br>:1029<br>பாடல்வரி<br>:1201<br>பாடல்வரி:<br>1299<br>பாடல்வரி:<br>2180<br>பாடல்வரி:536<br>பாடல்வரி:18<br>பாடல்வரி:61 | காசு மணியின் பொதுப் பெயர்<br>பணம்-என்பது பாம்பின் படம்<br>பொன் என்பது ஈழம் காணம்<br>மாடு மாடை | காசு<br>பணம்<br>பொன்<br>காணம்<br>மாடு<br>மாடை | மணி<br>வடம்<br>சூதாடும்<br>கருவி<br>குற்றம்<br>பாம்பின்<br>படம்<br>ஈழம்<br>பழங்காசு<br>செல்வம்<br>பொன் |
| கி.பி.9<br>ஆம்<br>நூற்றா<br>ண்டு | பிங்கலந்தை<br>எனும் பிங்கல<br>நிகண்டு<br>பாடல்வரி<br>:1219<br>பாடல்வரி<br>:3341<br>பாடல்வரி<br>:1232 | மனவுங் காசும் மணியின்<br>பொதுப் பெயர்<br>காணம் ஈழம் பொன் | காசு<br>காணம்<br>ஈழம்<br>பொன் | மணி<br>குற்றம் மணி<br>கோழை<br>பழங்காசு |
| கி.பி.<br>9.10 | கம்பராமா<br>யணம கிட்கிந்<br>தா காண்டம்<br>பம்பைவனப்<br>படலம்<br>பாடல்வரி:8<br>பாடல்வரி:41 | காசு அடை விளங்கிய காட்சி<br>த்து<br>ஆயினும்<br>காசு அறு மணியும் பொன்னும் | காசு<br>பொன் | மணி<br>பொன் |
| கி.பி. | ஜெயங்கொ | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| கி.பி. 11.நூ | ஜெயங் ண்டார்கலி ங்கத்துப்பரணி பாடல்வரி :198 | தழுவு செந்தமிழ்ப பரிசில் வாணர் பொன் பத்தொடு ஆறு நூறாயிரம் பெற பண்டு<br>பட்டினப்பாலை<br>கருவிடப் பொறிப் பண பணி | பொன்<br><br>பணம் | நாணயம்<br><br>புள்ளிகளை உடைய |
| கி.பி.13. நூ | பெரியபுரா ணம் பன்னி ரண்டாம் திரு முறை வம்பறா சருக்கம்<br>பாடல்:1111<br>பாடல்:568<br>பாடல்:426 | பணம்புரி அரவர<br>பின்னையார் தம் அடிமுகத்துப் பீடிகை மேற்காசு கண்டார் தந்த ஒரு காசு வாசிபட மற்றக் காசு நன்றாகி வாசிபட<br>தொழிவான் பதிகம் பாடிப் பெற்றபடி நற்காசு கொண்டு மாந்தர் அருவிலையிற் பெருங்காசும் அவையேயாகி அமுது செய்யத் தொண்டரள சம்பந்தர் இச்சையே புரிந்த | பணம்<br>காசு<br>நற்காசு<br>பெருங்காசு<br>பசும்பொன்<br>பொற்கிழி | படத்தை உடைய<br>பாம்பின் படம்<br>நாணயம்<br>"<br>"<br>பொன் |
| கி.பி. 14,15 நூ | திருவால வாயுடை யார் திருவிளையா டற்புராணம் கடம்பவன புராணம் இல் லாசங்கிரக அத்தியாயம் | ருளிய - உச்சி வைத்து பசும் பொன் ஆயிரக்கிழி<br>காசறச் செல் கென்று முடன்<br>ஆயிரம் பசும்பொன் கூட்டி யடங்க வோர் கிழியங்க கட்டி<br>பொருந்தப பாடுவோரே ஒளி ப்பலென்றோர் | காசு<br>பசும்பொன்<br>பொற்கிழி | முடிச்சு<br>குற்றம்<br>நாணயம்<br>பொன் முடிச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| கி.பி.15<br>16 ஆம்<br>நூற்றா<br>ண்டு | ஆதிவீரராம<br>பாண்டிய<br>னார் அருளிய<br>நைடதம் | காசுலாமுலைக்<br>கன்னியகை புல்லும் | காசு | நாணயம் |
| 18,19 நூ | சூளாமணி | காசறு வளப்பினோர் கன்னி<br>யேதுவா ஆசறவச்சு | காசு | குற்றம் |
| 18,19,நூ | பணவிடு தூது | பாளையக்காரர் பணங்கின் | பணம் | நாணயம் |
| | | பொக்கிஷ பணம் | ” | |
| | | பல்லங்கிக் காசு | காசு | ” |
| | | புல்ல வட்டக் காசு | ” | ” |
| | | புலக் காசு | ” | ” |
| | | சந்தமிக்காசு | ” | |
| | | தரு சுலுத்தான் காசு | ” | ” |
| | | முதல் தந்த மோடானிட்டான் | | |
| | | காசு | ” | |
| | | செந்தீக் குரு பவளக் காட் | வராகன் | ” |
| | | டிலுள்ள வராகன் | | ” |
| | | சென்ன பட்டணத்தான் சிவ | செம்பொன் | ” |
| | | ராயன் மம்மது கான் மன்னனு | வராகன் | |
| | | நிசானி வராகன் சொன்ன கிரிச் | துட்டு | ” |
| | | சீரங்கராயன் என்னும் செம் | துக்காணி | ” |
| | | பொன் வராகன் | | |
| | | துட்டு | முளை | |
| | | துக்காணி | வெட்டு | ” |
| | | கொங்கு முளை | ” | |
| | | குணங்கலூர் வெட்டு | ” | ” |
| | | வெங்கணழ் தாத்ர வெட்டு | ” | |
| | | சுழி முல்லா வெட்டு | ” | ” |
| | | தூத்துகுடியான் வெட்டு | ” | |
| | | வேற்றுச் சடகனிட்ட வெட்டு | ” | ” |
| | | தோற்று புது வெட்டு | ” | |
| | | சோழியன் வெட்டு | ” | 1 |
| | | ராமச்சந்திரன் வெட்டு | ” | |
| | | எம்பெருமான் வெட்டு | ” | 1 |
| | | திட்டமாம் மல்லன் சிகாபதியான் | ” | |
| | | வாழ்குடுகன் வெட்டு | ” | 1 |
| | | வெல்லும் இராமையன் வெட்டு | ” | |
| | | என்று சொல்லும் ஒரு கொப்பரை | பொற்பூச்சு | முத்திரை |
| | | வெட்டுக்கு | | அல்லது அச்சு |
| | | நுகண்டுக் கால் வெட்டு | பணம் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மெய்புள காரோட்டி வெட்டு<br>செப்பியமைக் காட்டு வெட்டு | வெட்டு | (it may be a die or punch on coins) |
| | | வெள்ளியிற் பொற் பூச்சு | ,, | |
| | | பூச்சைய நாய்க்கன் பணம் | | |
| | | தேய்ச்ச உணர | பணம் | |
| | | முழு செம்பு | வெட்டு | |
| | | வாய்ச்ச பழ முந்தின வெட்டு | பணம் | |
| | | விந்தை மயிலாப்பூர் வெட்டு | வெட்டு | |
| | | சந்தேகம் அச்சழிவு வீரராயன் பணம் | புது மின்னல் | |
| | | ஆண்டாள் | வெட்டு | |
| | | ஓசைப் பணம் | வெட்டு | |
| | | கிச்சம்மாள் வெட்டு | வெட்டு | |
| | | சங்கர வெட்டி புதூ மின்னல் | சக்கரம் | |
| | | நாகப்பன் வெட்டு | ,, | |
| | | மன்னுடை நஞ்சையன் வெட்டு | ,, | |
| | | விச்வநாத செட்டி வெட்டு | ,, | |
| | | மிஞ்சு சின்ன ராவுத்தர் வெட்டு | சாசு | |
| | | அஞ்சிறு கோபாலச்சக்கரம் | | |
| | | பல உளுந்தூர்ச் சக்கரம் | | |
| | | சால்பு திருவையாற்றுச் சக்கரம் | | |
| | | மேலாம் திருச்சிராப்பள்ளிச் சிறச்சக்கரம் காசு | | |

# களப்பிரரின் ஓர் அரிய பொற்காசு

**க.ஆ. திருஞானசம்பந்தம்,**
கொங்கு நாணயவியல் ஆய்வு மையம்,
ஈரோடு - 3.

### களப்பிரர் யார்?

கருநாடக மைசூர் நாட்டில் அமைந்துள்ள சிராவண பெல்கோலாவிற்கு அண்மையில் தொட்டபெட்டா (பெரிய மலை) சிக்கபெட்டா (சிறிய குன்று) என்னும் இரு மலைகள் உள்ளன. இச் சிக்கபட்டா குன்றிற்குச் சந்திரகிரிமலை என்பதும் பெயர். தொன்மைக் கன்னடக் கல்வெட்டுக்களில் சந்திரகிரிக்கு களவாப்பு என்ற பெயர் வழங்கியது. களவாப்பு என்னும் பெயர் கன்னட மொழியில் களபாப்பு என அழைக்கப்பட்டது. மேலும் கருநாடக மாநிலத்தில் பேலூர் மாவட்டத்தில் இருந்த ஹால்மிதி என்ற ஊரில் கிடைத்த கல்வெட்டு இப்பகுதியில் களப்போரா இனத்தவர் வாழ்ந்தனர் என்பதைக் குறித்திடும். கடம்பவமிசத்து அரசன் காகுத்த வருமனுக்கு (கி.பி.425-450) களப்போரர்களின் எதிரி என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. வேள்விக்குடிச் செப்பேட்டிலும், தாளவாய்புரம் செப்பேட்டிலும் காணப்பெறும் களப்பிரர் என்னும் பெயர் களப்போரர் என்னும் கன்டைச்சொல்லின் தமிழ்வழக்கேயாகும்.

### களப்பிரர் தமிழக வேந்தர்களை வென்று அவர்தம் நாட்டைக் கைப்பற்றுதல்:

கருநாடக மாநிலத்தின் கோலார்ப் பகுதியில் இருந்து நந்திமலைப் பகுதியை ஆண்டு வந்தவன் களப்பிரன்; நந்திமலைக்காவலன் அச்சுதன், களப்பிரன் என்னும் கலியரசன் நால்வகைப்படையுடன் தமிழகத்தின் மீது படையெடுத்து வந்து மதுரையையும் (பாண்டிய மன்னனையும்) ஏனைய வேந்தரையும் சிறைப்பிடித்து தமிழகத்தில் தன் ஆட்சியை நிறுவினான் என்னும் குறிப்புக்களை பெரிய புராணமும், கல்லாடமும், யாப்பருங்கலவிருத்தியுரை மேற்கோள் பாடலும் பின் வருமாறு குறித்திடும்.

### சேக்கிழாரின் பெரிய புராணத்தில்

பாண்டிய நாட்டின் மீது படையெடுத்த செய்தியைப் பெரிய புராணமும் கல்லாடமும் பின்வருமாறு உரைக்கின்றன.

பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் மூர்த்தி நாயனார் புராணத்தில் மூன்று பாடல்களில் மதுரை நகரைக் கருநாடகத்தலைவன் ஒருவன் நால்வகைப்படைகளுடன் வந்து பாண்டிவேந்தனைத் தோற்கடித்து மதுரையில் தன் ஆட்சியை நிறுவியதுடன் சமண சமயத்தைப் பரப்பி, சிவனடியார்களுக்கும் ஊறு விளைவித்த செய்தி குறித்திடப் பெறுகின்றன.

''கானக்கடி சூழ் வடுகக் கருநாடர் காவல் மானப்படை மன்னன் வலிந்து நிலன் கொள்வானாய் யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திரண்ட சேனைக்கடலும் கொடு தென்திசை நோக்கி வந்தான்.

வந்துற்ற பெரும்படை மண்புதையப் பரப்பி சந்தப்பொதியில் தமிழ் நாடுடை மன்னன்வீரம் சிந்தச்செருவென்று தன்னாணை செலுத்தும் ஆற்றால் கந்தப் பொழில் சூழ் மதுராபுரிக் காவல் கொண்டான்.

வல்லாண்மையில் வண்தமிழ்நாடு வளம்படுத்து நில்லா நிலை ஒன்றி இன்மையின் நீண்ட மேடு வில்லான் அடிமைத்திறம் மேவிய நீற்றின் சார்பு செய்யாது அருகந்தர் திறத்தினில் சிந்தை தாழ்ந்தான்.

### கல்லாடம் கூறும் செய்தி:

''படைநான்கு உடன்று பஞ்சவன் துறந்து
மதுரை வவ்விய கருநடர் வேந்தன்
அருகர்ச் சார்ந்து நின்று அரன்பணி அடைப்ப''

என்னும் கல்லாட ஆசிரியர் கூற்றின்படி, மதுரை வவ்விய கருநடவேந்தன் சமணம் சார்ந்து, அரண்பணி செய்வதைத் தடுத்தான் என்று நாம் உணருகிறோம்.

### சோழநாட்டில் களப்பிரர்:

புத்ததத்தர் என்னும் பௌத்த மதத்துறவி சோழநாட்டில் இருந்த பூதமங்கலம் என்னும் ஊரில் இருந்த பௌத்தமடத்தில் தங்கியிருந்த

போது பாலிமொழியில் அபிதம்மாவதாரம், விறயவினிச்சியம் என்னும் இரண்டு நூல்களை எழுதியுள்ளார். இந்தப் புத்ததத்தர் இலங்கை அரசன் சிறுகுட்டன் (கி.பி. 409 - 430) காலத்தில் வாழ்ந்தவராவர். விநயவினிச்சியம் என்னும் நூலை சோழநாட்டில் புகார்நகர அரசன் களப்பகுலவேந்தனாகிய அச்சுதவிக்கிரந்தன் ஆட்சிபுரிந்து கொண்டிருந்தபோது இயற்றியதாகக் கூறுகிறார். புத்ததாத்தரின் சமகாலத்தவராகிய புத்தகோசரும் தம்முடைய நூலில் சோழநாட்டை அரசாண்ட களப்பிர அரசன் ஒருவனைக் குறிப்பிடுகின்றார்.

### அச்சுதன் மூவேந்தரை வென்ற செய்தி:

இந்த அச்சுதன் சேர, சோழ, பாண்டியரை வென்று தமிழகம் முழுவதும் ஒருகுடைக்கீழ்கொண்டு வந்தான் எனவும், புலி, கயல், மீன் இலச்சினைகளைத் தன்கொடியில் எழுதிக்கொண்டான் என்றும் யாப்பருங்கல விருத்தியுரை ஆசிரியர் மேற்கோள் காட்டியுள்ள பாடல் தெரிவிக்கிறது. இப்பாடலின் ஆசிரியர் விளக்கத்தனார் ஆவார்.

''அடுதிறல் ஒருவ நிற்பரவுதும் எங்கோன்
தொடுகழல் கோடும் பூண் பகட்டெழில் மார்பில்
கயலொடு கலந்த சிலையுடைக் கொடுவரிப்
புயலுறழ் தடக்கைப் போர்வேல் அச்சுதின
தொன்றுமுதிர் கடலுலகம் முழுவதுடன்
ஒன்றுபுரி திகிரி உருட்டுவோன் எனவே''

### யாப்பருங்கல விருத்தியில்:

மற்றொரு பாடல் அச்சுதக்கோ எனவும் நந்திமாமலைக் காவலனைப் போற்றும் புதுமையைக் காண்போம்.

''பொருகுடை வளாகம் ஒருகுடை நிழற்றி
இருசிறப்பாளர்க்கு ஈந்து மனமகிழ்ந்து
அருள்புரி பெரும்புகழ் அச்சுதக்கோவே
நந்தி மாமலைச் சிலம்ப
நந்தி நிற்பரவுதல் நாவலர்க்கும் அரிதே!

இப்பாடல்மூலம் அச்சுதவிக்ரந்தன் ஏனைய சமயத்தையும் அந்தணர்களையும் ஆதரித்தான் என்பதை நாம் அறியமுடிகிறது.

### வேள்விக்குடிச் செப்பேடு:

கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் நெடுஞ்சடையன் பராந்தகனால் வெளியிடப்பட்டது. இவ்வேள்விக்குடி சாசனத்தால் கி.பி.575ல் களப்பிரர்க்கும் பாண்டியன் கடுங்கோனுக்கும் இடையே நிகழ்ந்த போர்பற்றி அறிய வாய்ப்பு ஏற்படுகிறது.

''அளவரிய ஆதிராசரை அகல நீக்கி அகலிடத்தை
களப்ரன் என்னும் கலியரசன் கைக்கொண்டு''

என வரும் வேள்விக்குடி செப்பேட்டு வரிகளால், தமிழகத்தை ஆண்டுகொண்டிருந்த கணக்கற்ற அரசர்களை அகற்றி, அவர்தம் நாட்டை ஆண்டான் என்பதையும் உணரமுடிகிறது. தென்னக முழுவதும் ஆண்டபெருவேந்தராக களப்பிரர் விளங்கிளர் என்பதை இலக்கிய மேற்கோள் பாடல்களும் வேள்விக்குடிச் சாசனமும் நமக்கு உணர்த்துகின்றன. இக்கூற்றுக்கு அரண்செய்வது போல ''தமிழ்நாவலர் சரிதை'' அச்சுதக்களப்பாளன் முடியுடை மூவேந்தர்களையும் வென்று சிறைப்படுத்தினான் என்று குறிக்கிறது.

### களப்பிரரை முறியடித்த பெருவீரர்கள்:

தொண்டை நாட்டை ஆண்டு வந்த சிம்ம விஷ்ணுவை (கி.பி. 575 - 615) வேலூர்ப்பாளையச் செப்பேட்டின்படி களப்பிரரை முறியடித்த மாவீரன் என்று குறிப்பிடுகிறது.

### வேள்விக்குடிசாசனம்:

கடுங்கோன் என்னும் பாண்டிய மன்னன் களப்பிரர் என்னும் கலியரசனை வெற்றி பெற்று மீண்டும் பாண்டிமண்டலத்தில் பாண்டியராட்சியை நிறுவினான் என்பதை''

''அளவரிய ஆதிராஜரை யகலநீக்கி யகலிடத்தைக்
களபர னென்னும் கலியரசன் கைக்கொண்டதனை யிறக்கியபின்
படுகடல் முளைத்த பருதிபோல் பாண்டியாதி ராஜன் வெளிப்பட்டு

.... தரணி மங்கையைப் பிறர்பாலுரிமை திறவிதினீக்கித் தன் பாலுரிமை நன்கனம் அமைத்த மானம் பேர்த்தானை வேந்தன் ஒடுங்கா மன்னர் ஒளிநக ரழித்த கடுங்கோ னென்னுங் கதிர்வேற்றென்னன்

எனக்குறிப்பதன் வாயிலாகக் களப்பிறரைக்கடுங்கோன் என்னும் பாண்டியமன்னன் பாண்டிய நாட்டினின்று துரத்தினான் என்னும் செய்தியை அறிய முடிகிறது.

இச்செய்தியை மேலும் அரண் செய்வது போல

''களப்பாழரைக் களைகட்ட மற்றிரள் தோள்
மாக்கடுங் கோன் மானம்
பேர்த்தருளிய கோன்' எனத்தளவாய் புரச்செப்பேடுகள் கடுங்கோனைப் போற்றும்

**களப்பிரர் பின்பற்றிய சமயம்:**

''கலியரசன் என்னும் பெயரில் உள்ள கலி என்பது ஒருவம்சத்தையே குறிக்கும் களப்பிரர் என்ற பெயர். களவர் என்னும் தமிழ்ச்சொல், பழங்கன்னடத்தில் களபரு என்று வழங்கியப்பின்னர் களப்பிரர் என்றானதாகும். இக்களபர் கர்நாடக மாநிலத்தின் நந்தி மலைப் பகுதியை ஆண்ட ஒரு மரபினராவர். இந்நாட்டிற்கு களபிருநாடு, களபப்பு நாடு என்று பிற்காலத்தில் பெயர் வழங்கியதாகச் கன்னடப்பொறிப்புகள் பலவற்றிலிருந்து தெரிகிறது.

நெடுங்சடையன் பராந்தகன் வேள்விக்குடிச்செப்பேடுகள் களப்பிரான் என்றும் கலிஅரசன் என்று களப்பிரர்களைக் குறிப்பிடுவதும், கலிகுலம் என்ற பெயருக்குக் காரணமான கலி என்ற சொல் கலிதேவன் என்னும் சமணசமயக் கடவுள் ஒருவரைக் குறிப்பதாகும். (எபிகிரேபிகா இண்டிகா வால்யூம் 15, பக்கம் 343) இவர்களுள் ஒரிரு அரசர்கள் புத்தமதச்சார்புடையவர்களாக விளங்கினார்.

**களப்பிராரின் குலமரபுச்சின்னம்:**

களப்பிரர், கொங்கணி அரசர்களைப்போல யானையையே தமது அரசு சின்னமாகக்கொண்டனர் யானை சமணர்களால் போற்றப்பட்ட ஒரு சின்னம் ஆதலால் இவர்களும் அதையே அரச சின்னமாகக் கொண்டனர். (வீயாரெம் கொங்குநாட்டுக்கவுண்டர்கள் பக்கம் 76, 78)

**களப்பிரரின் அடையாளமலர்:**

''விரியிணர் கோங்கமும்'' என்னும் வரி யாப்பருங்கல விருத்தியுரை மேற்கோள்பாடலாகக் காட்டப்பட்டுள்ளது. களப்பிரரின் அடையாள மாலைமலர் 'கோங்கம்' என்பது பெறப்படுகிறது.

சங்க இலக்கியங்களின்படி காடுகளில் கோங்கம் மிகுதியாக வளர்ந்திருக்கும். இளவேனிப்பருவம் துவங்கியவுடன் இது மிகுதியாகப்பூக்கும். இதன் முகை உருண்டிருக்கும். எனவே இதுமகளிரின் நகிலுக்கு உவமையானது.

'' வேனிற் கோங்கு'' (புறம் -321)

கோங்கு முகைத்தன்ன குவி மூலை ஆகம் (அகம் 240)

எனவும் புலவர் பாடுகின்றனர்.

**களப்பிரர் காசுகள்:**

தமிழ்நாட்டின் வரலாற்றில் இருண்ட காலம் கி.பி. 3ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 6 ஆம் நூற்றாண்டு வரை களப்பிரர் ஆண்ட காலம் தமிழக வரலாற்றின் இருண்ட காலம் என்பர் வரலாற்று ஆசிரியர்கள்

வரலாற்று ஆசிரியர்களின் கூற்றினை மறு ஆய்வு செய்ய வேண்டிய நிலையில் இன்று நாம் உள்ளோம்.

ஏனெனில் களப்பிரர் ஆண்டதாகக்கருதப்படும் இருண்ட காலத்தில் தமிழகத்தில் ரோமாபுரியை ஆண்ட (கி.பி. 345- கி.பி. 600வரை) 22 க்கும் மேற்பட்ட ரோமாபுரி மன்னர்களின் செம்பு, வெண்கலக்காசுகள் (பல்லாயிரம்) மக்கள் மத்தியில் செலா வணியில் இருந்திருக்கும் முகமாக, கருவூர் அமராவதி ஆற்றங்கரைங்படுகையில் இருந்தும், மதுரை வைகை ஆற்றின் படுகையில் இருந்தும் மண்காசு எடுப்போரிடமிருந்து காசியல் ஆய்வாளர்கள் பலர் சேகரித்துள்ளனர்.

**ரோமானியரின் காசுகள்:**

தமிழ்நாடு தொல்பொருள் துறையினர் அண்மைக்காலத்தில் நடத்திய அழகன்குள அகழ்வுகளில் ரோமானியக் காசுகள்

கண்டெடுக்கப்பட்டுள்ளன. ரோமானியப்பேரரசர் 2-வது வாலான்டியனின் (கி.பி.378-கி.பி. 383) செம்புக்காசும் ஆர்க்கேடியஸ் (கி.பி. 383 -கி.பி. 408) காசும் கிடைத்துள்ளன. மேலும் பைசாந்திய மன்னன் முதலாம் ஜஸ்டினியன் (கி.பி.538-539) 40 நும்மியா வெண்கல, செம்புக்காசு திண்டுக்கல் சீமையிலிருந்தும் கிடைத்துள்ளன.

முதலாம் கான்ஸ்டன்டைன், வாலன்டினியன் தியோடோசியஸ் ஹானோரியஸ், மார்ஸியன், லியோ, ஜுனோ, அனஸ்டாஸியஸ் முதலிய ரோமாபுரி மன்னர்களின் காசுகள் தமிழகத்தில், பவானி, மாமல்லபுரம், பேரூர், புதுச்சேரி, திருக்கோவிலூர், ஆத்தூர், கருவூர், மதுரை நகரங்களில் காசியல் சேகரிப்பாளருக்குக் கிட்டியுள்ளமை எண்ணிப்பார்ப்பதற்குரியது!

களப்பிரர் ஆட்சியின் போது,ரோமாபுரி நாட்டுக்கும் தமிழகத்திற்குமிடையே நிகழ்ந்த வாணிபத்திற்கு இக்காசுகள் சாட்சிமாத்திரையாக அமைகின்றன.

## இருண்ட காலத்தில் தமிழ் இலக்கியம்:

நாட்டில் வலுவான ஆட்சியும், செல்வச்செழிப்பும், இருந்தால்தான் நல்ல இலக்கியங்கள் தோன்றும் என இலக்கிய ஆய்வாளர் கூறுவர். இக்கூற்றுக்கு அரண்செய்வது போல, களப்பிரர் ஆட்சிக்காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருமூலர் திருமந்திரம், பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள், முத்தொள்ளாயிரம், பெருங்கதை போன்ற அரிய இலக்கியமலர்கள் தமிழில் மூகிழ்த்துள்ளன.

## தமிழகத்தில் களப்பிரர் காசுகள் பற்றி ஆய்ந்தோர்:

முதன் முதலில் ஆந்திர நாணயவியல் அறிஞர். எஸ். இராமைய்யா அவர்கள் வாரணாசி நாணயவியல் சங்க இதழில் (வால்யூம் 35 ல், 1973-ஆம் ஆண்டு) களப்பிரரும் அவர்தம் நாணயங்களும் பற்றி ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டுள்ள நாணயங்களின் படங்களில் காணும் காசுகள் அனைத்தும் பிற்கால நாணயங்களே!

பின்னர் திமைலர் ஆசிரியர் வெளியிட்ட களப்பிரர் காசில் காணும் எழுத்துப்பொறிப்பினை நாணயவியலார் ஏற்றுக் கொள்ளவில்லை. (கொங்கு வரலாறு. வ. இராமமூர்த்தி ப.353)

**களப்பிரரின் ஓர் அரிய பொற்காசு:**

அண்மையில் இக்கட்டுரை ஆசிரியர் நான்கு காசுகளை கரூர் அமராவதி ஆற்றின் படுகையிலும், மதுரை வைகை ஆற்றின் படுகையில் இருந்தும் சேகரித்துள்ளார். அவற்றில் மூன்று காசுகள் செம்பொன்காசுகள். ஒன்று முகப்பில் யானை உருவம் பொறிக்கப்பெற்ற பொன் காசாகும். இப்பொற்காசுபற்றி எழுதுவதே இக்கட்டுரையாசிரியரின் நோக்கமாகும்.

**காசுகள் பற்றிய குறிப்பு:**

காசு உலோகம் மாற்றுக்குறைந்த பொற்காசு வடிவம்: வட்டம் நிறை (எடை) 2 கிராம்

கிடைத்த இடம் : மதுரை வைகை ஆற்றுப்படுகை

முகப்பு : பாயும் நிலையில் இடப்பக்கம் யானை யானையின் முன்கால்பக்கம் மீன் சின்னம் யானையின் முதுகுப்பகுதிகாசின் விளிம்பில் வில்அம்பு காசின்மேல் இடது விளிம்பில் புலிச்சின்னம்

புறம் : களப்பிரரின் அடையாள மலர் 'கோங்க மலர்'

மூவேந்தர் தம் சின்னங்கள் குலமரபுச் சின்னங்கள் பொற்காசில் பொறிக்கப்பட்டிருப்பதாலும் களப்பிரர் தம் குலமரபுச் சின்னம் யானை மற்றும் கோங்க மலர்ச்சின்னம் அடையாள மலர் என்பதாலும் இக்காசு களப்பிரர் காசாக இருக்கலாம்.

**காசியில் ஆய்வு:**

தமிழக வேந்தர்கள் வெளியிட்டுள்ள காசுகளை ஆராய்ந்து பார்க்கும் போது, வெற்றிபெற்ற வேந்தன், தோற்ற வேந்தரின் குலுமரபுச்சின்னங்களை தான் வெற்றிபெற்றதற்கு அறிகுறியாக காசுகளின் முகப்பில் தன் சின்னத்தோடு ஏனைய வேந்தரின் சின்னங்களைப்பொறித்தும், புறத்தில் தன் குலமரபுச்

சின்னத்தைப்பொறித்தும் வெளியிடுவது பொதுநியதியாக உள்ளது. இக்கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் சங்ககால மன்னர்கள் வெளியிட்ட சேர, சோழ, பாண்டிய பொன் காசுகளில் வெற்றி பெற்றவேந்தன் தன் காசில் தன்னால் தோற்கடிக்கப்பட்ட ஏனைய வேந்தரின் இலச்சினைகளை உடன் பொறித்து வெளியிட்டமையைக் காணலாம்.

மேற்கூறிய கருத்தை மெய்ப்பிக்கும் வகையில் மூவேந்தர் சின்னம் உடன்பொறிக்கப்பெற்ற பல்லவ நந்திவர்மனின் காசிலும் முகப்பில் பல்லவரின் காளைச்சின்னத்துடனும் வில், கயல், புலிச்சின்னங்களைக் காசின் புறத்தில் பொறித்திருக்கும் கவின்மிகு காட்சியைக் காணலாம்!

களப்பிரர் ஆட்சியில் தமிழக வரலாற்றில் இருண்ட காலமாக அமைந்துள்ளது என்பதை மறுஆய்வு செய்ய வேண்டியவராக நாம் அமைகிறோம்.

முன்னதாக கூறியவாறு ரோமாபுரியை ஆண்ட பிற்கால ரோமாபுரி மன்னர்களில் 22 மன்னர்களின் காசுகள் தமிழ்நாட்டில் கிடைப்பதாலும், அரிய தமிழ் இலக்கிய மலர்கள் தமிழகத்தில் கிடைத்திருப்பதாலும் அரிய களப்பிரரின் பொற்காசுகளும், கிடைத்திருப்பதாலும் களப்பிரர் ஆட்சி தமிழக வரலாற்றில் ஒரு பொற்காலமாகும்!

## பார்வை நூல்கள்


1. சங்கஇலக்கியத்தில் மலர்கள் : இல. தாணம்மாள்
2. சைனரின் தமிழிலக்கண நன்கொடை: சுப. அறவாணன்
3. களப்பிரர் : நடன காசிநாதன்
4. தமிழர் காசுஇயல் : நடனகாசிநாதன்
5. பாண்டிய நாட்டில் களப்பிரர்கள் : மு. அருணாசலம்

6. தமிழ்நாடு அரசுவெளியீடு களப்பிரர் வரலாறு
தமிழ்நாட்டு வரலாறு பல்லவர் - பாண்டியர் காலம் : டாக்டர். அ.கிருஷ்ணசாமி

7. கொங்குவரலாறு : வீ. இராமமூர்த்தி

8. களப்பிரர் : எஸ்.டி.நெல்லைநெடுமாறன்

9. இந்திய நாணயச்சங்க இதழ்தொகுதி 35 (1973) : ''களப்பிரரும் அவர்தம் நாணயங்களும் எஸ். ராமய்யா.

## களப்பிரர் பொற்காசு



முகப்பு



புறம்







# அண்மைக்கால நாணயங்கள் அச்சிடுவதில் தேவைப்படும் சீர்திருத்தம்

**எஸ். சந்திரசேகரன்**
துணைத் தலைவர்,
சோழ மண்டல நாணயவில் கழகம்.

சுமார் 2700 ஆண்டுகள் முன்னதாக நாணயங்கள் தோன்றினாலும், 'நாணயவியல்' என்பது ஏறத்தாழ 200 ஆண்டுகளாகவே உள்ளதாக அறிகிறோம். பண்டைய நாணயங்கள், வரலாற்றுக்குத் துணை நின்றதையும், சில நாணயங்கள் வரலாற்றிரினையே மாற்றியமைக்கக் காரணமாயிருந்ததாகவும், அவை சார்ந்த காலத்தினைப் பற்றிய வரலாறுகளை நாம் அறிய எவ்வாறு உதவின என்பதைப் பற்றியெல்லாம் மீண்டும் மீண்டும் குறிப்பிட வேண்டியதில்லை.

இன்றைய உலகில் நாகரிகமடைந்த மக்களிடையே நாணயங்களின் புழக்கம் என்பது இன்றியமையாத தாகிவிட்டது. இன்று உலகில் உள்ள பல நாடுகள் நாணயங்களை பலவித உலோகங்களில் உருவங்களில், அழகான தோற்றங்களுடன் வெளியிடுகின்றன. அவைகளை சேகரித்து, கற்றுணர்ந்து, ஒழுங்குபடுத்தி வைத்து, அதில் நாம் பெருமிதம் கொள்கிறோம். சில விநோதமான நாணய வெளியீடுகள் குறித்து நண்பர்களுடன் கருத்து பரிமாறிக்கொள்கிறோம். பலவித அழகிய தோற்றங்களைக் கொண்ட நாணயங்களைச் சேகரிப்பதிலும் நமக்கு மகிழ்ச்சி உண்டாகிறது என்பது தெளிவு.

நமது நாடு விடுதலை பெற்றபிறகு வெளியிடப்பட்ட நாணயங்களைப்பற்றி சிறிது சிந்தித்து பாருங்கள். அதிக அளவில் மக்களிடையே புழக்கத்திலிருந்த 20, 10, 5, 3, 2, 1 பைசா நாணயங்கள் பெருவாரியாக அலுமினிய கலப்பு உலோகத்தில் வெளியாகின.

அவை குறைந்த காலத்திலேயே தேய்ந்து, புழக்கத்திற்கு உதவாத செல்லாக் காசுகளாக மாறின. இன்றும் கூட செலாவணியில் சில உள்ளன. குறைந்த மதிப்புடைய 3, 2, 1 பைசாக்கள் தற்போது புழக்கத்தில் இல்லை.

சமீப காலமாகத்தான் உறுதியாக நீடித்து நிற்கும் ஸ்டெயின்லஸ் ஸ்டீல் நாணயங்கள் தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

எல்லா நாடுகளிலும் உள்ள வழக்கத்திற்கொப்ப நமது நாட்டிலும், (Commomorative Coins) எனப்படும் 'விழா ஞாபகமூட்டும் நாணயங்களும் அச்சாகி அவ்வப்போது வெளியாகின்றன. இவை அநேகமாக 1, 2, 5, 10, 50, 100 ரூபாய் மதிப்புகளில் வெளியானாலும் 10, 50, 100 ஆக உள்ள உயர்மதிப்பு நாணயங்கள் பொதுமக்கள் புழக்கத்திற்கு என வெளிவருவதில்லை. பிற மதிப்புகளான 1, 2, 5 ரூபாய் மதிப்புள்ளதும், மக்களிடையே பெருவாரியாக புழக்கத்திலுள்ளவையுமான நாணயங்களின் உருவத் தோற்றங்களைப்பற்றி சிறிது கவனிப்போம்.

ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் நாணயங்கள் அநேகமாக ஒரே உருவத்தில் உள்ளன. இரண்டு ரூபாய் நாணயங்களுக்கு ஒரப்பட்டைகள் இருப்பினும், அவைகளில் தேய்வுண்டாகி ஒரு ரூபாய் நாணயத்தின் உருவத்தை வெகு சீக்கிரமாக அடைகின்றன. நாம் இரண்டு ரூபாய் நாணயத்தை ஒருவருக்கு கொடுத்தோமாகில், அவர் உற்று நோக்கி அதில் 2 என்ற எண்ணைக் கண்டபின்னரே, அதை இரண்டு ரூபாய் நாணயம் என ஏற்றுக்கொள்வார். விழிப்புணர்வை உடையோருக்கு மட்டும் இது சாத்தியம். பொருட்களை தொட்டுணரும் விழியிழந்தோர் எவ்வாறு இதை அறிவர்?

சமீப காலத்தில் ஐரோப்பாவில் வெளியிடப்பட்டுள்ள 'யூரோ' நோட்டுக்களில் கூட விழியிழந்தோர் தொட்டுணரும் வண்ணம் புடைப்பான எழுத்துக்கள் அச்சிடப்படுவதாக செய்திகள் வந்துள்ளன. தற்போதுள்ள 5 ரூபாய் நாணயம் 50 பைசா நாணயத்தின் தடித்ததோர் உருவமே. நாணயத்தின் கனத்தினை வைத்து உணரக்கூடியது. உருவத்தில் தற்போதுள்ள ஒரு ரூபாய் நாணயம் பழைய 50 பைசா நாணயத்தினைவிட மிகச்சிறிதளவே வித்தியாச முடையது.

இக்குறைகளைக்களைய நாணயவியல் கழகத்தைச் சேர்ந்த நாம் அரசு செவிமடுக்கும் வகையில் குரல் எழுப்ப வேண்டாமா?

**என்னுடைய கருத்துக்கள் பின்வருமாறு:**

1. வெளியிடப்படும் மதிப்புடைய 1, 2, 5, 10, 50, 100 ரூபாய் நாணயங்கள் அனைத்தும் பொதுமக்கள் புழக்கத்திற்கு தாராளமாக வெளியிடப்பட வேண்டும்.
2. ஒவ்வொரு மதிப்புடைய நாணயத்தின் உருவமும், வேறு மதிப்புடைய நாணயத்தின் உருவத்தினின்று வெகுவாக மாறுபட்டிருக்க வேண்டும்.
3. போலியாக கள்ள நாணயங்கள், அச்சடிக்க இயலாதவாறு பல இரகசிய நுணுக்கங்களைக் கொண்டதாக நாணயங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.
4. நாணயங்களில் நாடு முழுமையும் உள்ள முதல் நிலை கலைஞர்கள், கவிஞர்கள், புலவர்கள், வல்லுநர், தேசியவாதிகள் ஆகியோரின் உருவத் தோற்றங்களுடன் 'ஞாபக மூட்டும்' நாணயங்கள் வெளிவர வேண்டும்.
5. நாணங்களின் உருவங்களையும், தோற்றங்களையும் அடிக்கடி மாற்றியமைப்பது உள்ள நாணயங்கள் உருவாவதை கணிசமாகத் தடுக்கும்.
6. நாணயங்களின், நாட்டினைப்பற்றிய, நாகரீகத்தைப் பற்றிய குறிப்புகள் சில ஏற்படுத்தி, நமது நாட்டின் கொள்கைகளை பிற நாடுகளிலும் அறியும்வண்ணம் செய்ய வேண்டும்.
7. நமது நாட்டின் குடியரசு தலைவர்களின் உருவத் தோற்றம் கொண்ட நாணங்களை வெளியிடலாம்.
8. புழக்கத்தில் உள்ள நாணயங்களைக் கையாளுவதில் மக்களுக்கு இடையூறு ஏற்படாதவிதத்தில் உருவம், வடிவம் கொண்ட நாணயங்களை வெளியிடவேண்டும்.

பிற நாட்டினரும் நமது நாணயங்களை மதித்து நாணயச் சேகரிப்போர்களிடையே மதிப்பைக் கூட்டும் வண்ணம், அழகு மிளிரும் நாணயங்களை இனி வெளியிடுங்கள் என நம்புவோம்.

# பழைய திருவாங்கூர் சமஸ்தான காசுகள்

**எஸ். சந்திரசேகரன்.**
உறுப்பினர், சோழமண்டல நாணயவியல் கழகம்.

இந்திய குடியரசில் சேருமுன்பாக இருந்த திருவாங்கூர் சமஸ்தானத்தின் நாணயச்செலாவணி வரலாறு மிகப்பெரியது.

இலக்காசு, ஆனக்காசு, ஆகியவை இந்நாட்டின் பண்டைய காசின் பெயர்கள் பழைய ஆவணங்கள் நாகப்பணம், தேசப்பணம் சிக்கா ரூபா வீராயன் அச்சு மற்றும் வராகன் போன்ற நாணயங்கள் வழக்கிலிருந்ததையும் சுட்டுகின்றன. சிறு மதிப்புடைய கல்லி, ராசிப்பணம் மற்றும் கச்சாரூபா ஆகியவையும் அரசின் தனிப்பட்ட கஜானா காசுகளாக வழக்கத்திலிருந்தன என்றும் தெரிகிறது. இவை எவ்வளவு காலம் வழக்கிலிருந்தன என்பதற்கு சான்றுகள் ஏதும் இதுவரை கண்டறியப்படவில்லை. என ஆய்வர்கள் தெரிவிக்கிறார்கள்.

இவைதவிர வீரராயன் புதுப்பணம், கொச்சிப்புத்தன், மாசிப்பணம், தலைச்சேரிப்பணம்,மற்றும் பறங்கிவராகன் ஆகிய கேரள அரசு சம்பந்தப்படாத நாணயங்களும் நாட்டில் புழக்கத்திலிருந்து வந்தன. கி.பி. 1790-ல் பத்மநாபபுரம் என்ற இடத்தில் முதல் நாணயச்சாலை திருவாங்கூர் சமஸ்தானத்தில் நிறுவப்பட்டது.

மார்த்தாண்ட வர்மா (கி.பி. 1730-58) காலத்தில் 'புத்தன்' நாணயங்கள் வழக்கத்தில் இருந்தன. ஆனால். அவருக்குப்பின் அரசுரிமை பெற்ற தர்மராஜா (கி.பி.1758 -1798) காலத்தில்தான் முதன்முதலாக 'சக்கரம்' எனும் நாணயமாற்று முறை புழக்கத்திற்கு வந்தது. அரை சக்கரம் (செப்பு மற்றும் வெள்ளி) சக்கரம் மற்றும் இரண்டு சக்கரம் (வெள்ளி) ஆகியன சக்கரம் வரிசையில் வெளியிடப் பட்டன. அரை சக்கரம் நாணயத்தின் ஒரு பக்கம் சங்கு சுற்றி புள்ளி, மறுபுறம் சுதர்சன சக்கரம் சுற்றி புள்ளிகளுடன் வெள்ளியில் சிறு அள வில் வெளியிடப்பட்டது.

செப்பிலான அரை சக்கரம், வெள்ளியிலான அரை சக்கரம், சக்கரம்,இரண்டு சக்கரம் மற்றும் தங்கத்தாலான அனந்தராயன் அரை மற்றும் இரண்டு பணம் ஆகிய காசுகள் பாலராமவர்மா (கி.பி.1798 - 1818) காலத்தியவை.

கி.பி. 1815-29 ஆண்டில் அரசாண்ட ராணி பார்வதி பாய் காலத்தில் வர்த்தக தேவைக்கும் பொருளதாரம் மேம்படும் முறையில் பணச்செலாவணி பெறவும் சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கி.பி.1816 ம் ஆண்டில் வழக்கிலிருந்த கருடன், தாமரை சின்னங்கள் பொறித்த நாணயங்கள் திரும்பப்பெறப்பட்டு, மூன்று தலை நாகத்தின் உருவத்துடன் நாணயங்களின் மதிப்பினை மலையாளத்தில் குறிப்பிடும் புது இரண்டுகாசு, நான்கு காசு மற்றும் எட்டு காசு புது இரண்டு காசு, நான்கு காசு மற்றும் எட்டு காசு மதிப்புடைய செப்புக்காசுகளையும், வெள்ளி நாணயங்களும் அச்சிட அனுமதிக்கப்பட்டது.

பிரசித்தி பெற்ற சங்கீதப்பிரியரும் வல்லுநருமான சங்கீத அரசர் ஸ்வாதித்திருநாள் (கி.பி. 1829-47) ஒரு சங்கு, சிவலிங்கம் அல்லது விஷ்ணுஉருவம் பொறித்த சிறுமதிப்புடைய சிறு நாணயங்களை வெளியிட்டார்.

பின்னர் வந்த உத்தரம் திருநாள் (கி.பி. 1847 -1860) பழைய நாணயங்களை திரும்பப்பெற்று நான்கு வெவ்வேறு மதிப்புகளுடைய திருமால் சிலை உருவத்துடன் புது நாணயங்களை வெளியிட்டார். ஆயில்யம் திருநாள் (கி.பி.1860-1880) நாணய வெளியீட்டில் பல மாற்றங்களைக் கொண்ர்ந்தார். வெள்ளிப்பணம் (ஒரு பணம்) என்ற நாணயத்தில் மலையாள ஆண்டினை பழமையான மலையாள எழுத்தில் பொறிக்கச்செய்தார்.கி.பி. 1864 ல் நான்கு சக்கரம் மதிப்புடைய வெள்ளிப்பண நாணயத்தை இயந்திர அச்சுமுறையில் வெளியிட்டு புழக்கத்தில் விட்டார். கி.பி.1877 ல் கிறிஸ்துவ சாகப்தம், மலையாள சகாப்தம் இரண்டும் குறிப்பிட்டதும் ரூ. 7 1/2 மற்றும் ரூ 3 3/4 மதிப்புடையதுமான வராகன் மற்றும் அரைவராகன் நாணயங்களை தங்கத்தில் வெளியிட்டார். இந்த பகோடா நாணயங்களே திருவாங்கூர். சமஸ்தானத்தில் வெளியிடப்பட்ட இரு மொழிகள் கொண்ட முதல் நாணயமாகும்.

ஆனால் இவை புழக்கத்தில் இல்லாது போகவே, இவருக்குப்பின் வந்த அரசர்கள் தங்கத்தில் நாணயங்களை வெயிடுவதை நிறுத்திவிட்டனர்.

ஆனால் கி.பி. 1880-1885-ல் அரசாண்ட விசாகம் திருநாள், கோவில்களில் ஆண்டவனுக்கு படைப்பதற்காக ஆங்கிலேயர் வெளியிட்ட சவரன் அரைசவரன் நாணயங்களுக்கு ஒப்ப இரண்டு தங்க அடையாளக்காசுகளை வெளியிட்டார். ஆனால் இவை அரசாங்க செலாவணியில் சேராதலை. இருந்தும் அவைகளில் அரச இலச்சினைகள் பொறிக்கப்பட்டிருந்தன. கி.பி. 1881 விரை வீரராயன் வெள்ளிப்பணமும் தங்கப்பணமும் செலாவணியில் இருந்ததாகத் தெரிகிறது.

ஸ்ரீ மூலம் திருநாளின் (கி.பி.1885-1924) காலத்தில் இயந்திரத்தில் நாணயங்கள் அச்சுடிக்கப்பட்டன. இவ்வாறு செப்பு உலோகத்தில் காசு ஒன்று. காசு நான்கு மற்றும் நான்கு காசு, காசு எட்டு மற்றும் எட்டுகாசு சக்கரம் ஒன்று மற்றும் ஒரு சக்கரம் வெள்ளியிலான சக்கரம் இரண்டு மற்றும் இரண்டு சக்கரம் (அரைப்பணம்) இயந்திர முறையில் அச்சடிக்கப்பட்டன. நான்கு மாதிரிகளில் வெள்ளிப்பணங்கள் உபயோகத்திலிருந்தன. வெள்ளியில் வெளியாகிய நாணயங்களின் போலிகள் அதிகமாகவே அவை அச்சிடுவது நிறுத்தப்பட்டு தேவையான வெள்ளி நாணயங்கள் பர்மிங்ஹாமில் அச்சடித்து தருவிக்கப்பட்டன.

அரசரின் மார்பளவு உருவம்தாங்கிய அரை ரூபாய் மற்றும் செம்பிலான ஒரு சக்கரம் நாணயங்கள் தவிர வேறுமாற்றங்கள் ஏதும் இன்றிநாணயங்கள் நாணயங்களளை சித்திரை திருநாள் (கி.பி.1924-1942) வெளியிட்டார். செப்பு ஒரு காசு, நான்கு காசு மற்றும் எட்டுகாசு நாணயங்கள் **BRV** என்ற இலச்சினைகளுடன் வெளியிடப்பட்டன. ஸ்ரீமூலம் திருநாள், சித்திரை திருநாள் ஆகியோரால் வெளியிடப்பட்ட ஒருகாசு செப்பு நாணயம் மிக்க அரிதென கூறப்படுகிறது.

திருவாங்கூர் நாணயங்கள் 1946 ம் ஆண்டு வரை அச்சடிக்கப்பட்டு 1950 ஆண்டு மார்ச் 31 வரை வழக்கிலிருந்தன.

திருவாங்கூர் சமஸ்தானத்தின் நாணயங்களில் உள்ள சிறப்பம்சங்கள்:

1. எந்த நாணயத்திலும் வெளிநாட்டினரது ஆதிக்கத்தின் அடையாளம் காண இயலாது.

2. நாட்டில் பிரதானமாக உள்ள பாம்பு வழிபாடு, பாம்பின் படத்தைக்கொண்ட (பார்வதிபாய் என்பவர் வெளியிட்ட) நாணயங்களில் தெரிகிறது.

3. மலையாள கொல்லம் ஆண்டும் வெகு காலமாக நாணயங்களில் பொறிக்கப்பட்டது.

4. நாணயங்களில் பொறிக்கப்பட்ட சின்னங்கள் அரசர்களின் வழிபாட்டு முறை, மதநம்பிக்கை ஆகியவற்றை சுட்டுவதாக இருந்தன

5. இருமொழிகள் கொண்ட நாணயங்கள் வெளியிடப்பட்டன.

6. 1903 -ம் ஆண்டே ரூபாய் நாணயம் அச்சிட்டு வெளியிட அத்தாட்சி பெற்றிருந்தது. ஆனால் இந்நாட்டிற்கு செலவாணியில் ரூபாய் நாணயம் வெளியிடப்படவில்லை. பிரிட்டீஷ் இந்திய ரூபாவுக்கு 28 $^{1}/_{2}$ சக்கரம் என மதிப்பிடப்பட்டிருந்தது. என் சேகரிப்பில் உள்ள சில திருவாங்கூர் நாணயங்களின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

   1938 ம் ஆண்டு பாலராம வர்மா மகாராஜா செப்பு-ஒரு சக்கரம்.
   1938 ம் ஆண்டு பாலராம வர்மா மகாராஜா செப்பு எட்டுகாசு.
   1888 ராமவர்மா (ஆறாவது) செப்புஅரை சக்கரம்.
   1938 பாலராமவர்மா மகாராஜா செப்பு நான்கு காசு.
   1938 பாலராமவர்மா மகாராஜா செப்பு ஒரு காசு.



*1938*-ம் ஆண்டு - பால ராமவர்மா மகாராஜா செப்பு - ஒரு சக்கரம்.



*1938*-ஆம் ஆண்டு பால ராமவர்மா மகாராஜா செப்பு - எட்டு காசு



*1988*-ஆம் ஆண்டு பால ராமவர்மா மகாராஜா செப்பு - அரை காசு.



*1938*-ஆம் ஆண்டு பால ராமவர்மா மகாராஜா செப்பு - நான்கு காசு



*1938*-ஆம் ஆண்டு பால ராமவர்மா மகாராஜா செப்பு - ஒரு காசு

---

**ஆதாரம்:**

நாணய வல்லுநர் திரு. பி. கோப்பகுமார் அவர்கள் 'ஹிந்து' ஆங்கில நாளிதழில் வெளியிட்ட கட்டுரைகள்.

# குடியேற்ற நாடுகளின் நாணயங்கள்

**எஸ். சந்திரசேகரன்**

உறுப்பினர் சோழமண்டல நாணயவியல் கழகம்.

ஆய்வாளர்களின் கருத்துக்களின்படி இந்திய துணைக்கண்டத்தின் மக்கள் 6 முக்கிய மனித இனங்களைச் சேர்ந்தவர் என தெரிய வருகிறது. அவை 1. நெக்ரிடோ, 2. புரோட்டோ ஆஸ்ட்ரலாயிட்ஸ் அல்லது ஆஸ்ட்ரிக்ஸ் 3. மங்கோலாயிடுகள் 4. திராவிடியன் 5. மேற்கத்திய பிராச்சி திபால்ஸ் நீக்ராய்ட்ஸ் மற்றும் 6. நார்டிக் ஆரியர்கள் என்பனவாகும்.

இவர்களில் மிகப்பழமையானதும் மற்றம் ஆப்ரிக்காவிலிருந்து குடிபெயர்ந்து வந்து தற்போது அந்தமான், நீலகிரிமலை ஆகியவற்றிலுள்ள இருளர்கள், தோடர்கள், பனியர்கள் குரும்பர் ஆகியோர் பிராச்சியால்ட் நீக்ராயிட் இனமாகும். பிறிதொரு 'ஆஸ்ட்ரிக்ஸ்' இனம் இந்தியாவில் குடியேறினாலும் இந்தியாவைவிட்டு கிழக்கு புறமாக வெளியேறி பர்மா, மலேயா போன்ற தென், கிழக்கு ஆசிய நாடுகளில் குடியேறினர். இவ்வினமக்களே இந்திய நாகரிகத்துக்கு அடிகோலினர். 'திராவிடியன்' என்ற இனம் மத்ய தரைக்கடல் ஆசியாமைனர் போன்ற பிரதேசங்களிலிருந்து குடியேறி இந்தியா முழுவதும் பிரவினார்கள். வரலாற்றிலிருந்து இவர்களே சிந்து சமவெளி நாகரிகத்தை தோற்றுவித்தவர்கள் என்பதும், பிற இனங்களான ஆஸ்ட்ரிக்ஸ் மற்றும் நீக்ராயிட்ஸ் இனங்களை பலவித தந்திரங்களால் ஏமாற்றி, இந்தியா முழுவதும் பரவியிருந்ததாயும் தெரிகிறது. மங்கோலாயிடுகள் இந்தியாவின் வடகிழக்கு பிரதேசத்திலிருந்து குடிபெயர்ந்து வந்து அஸ்ஸாம், நாகாலாந்து, மிசோ ஆகிய பகுதிகளில் குடியேறினர் என்பதும் தெரிகிறது.

பிறிதொரு இனமான நார்டிக் ஆரியர்கள், சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன் மத்ய ஆசியாவை விட்டு வெளியேறிய இந்தோ-இரானிய வகுப்பினரின் ஒரு பிரிவேயாகும். இவர்கள் மெசபடோமியாவில் சிலநூற்றாண்டுகள் குடியேற்றம்

கொண்டிருந்தனர். பிறகு கி.மு.2000 - 1500 க்கு இடைப்பட்ட காலத்தில் முதலில் மேற்கு மற்றும் வடக்கு பஞ்சாபில் குடியேறி, பிற்காலத்தில் அங்கிருந்து சிறிது சிறிதாக கங்கை நதிக்சமவெளி வரையிலும் அதற்கு மேலும் பரவினார்கள். உயரிய நாகரிகமும் பல செங்கற்கட்டுமானங்கள் உட்பட பல வசதிகளை ஏற்படுத்தி வாழ்ந்து வந்த சிந்துசமவெளி மக்களை எதிர்த்து போரிட்டு கால்நடை மேய்க்க வந்த ஆரிய இனத்தவர், நகர வாழ் இனத்தவரான சிந்து சமவெளி மக்களை எதிர்த்து வந்தனர். ஆனால் வரலாற்று ரீதியாக சிந்து சமவெளி வாழ்மக்களுக்கு அவர்களுடைய நாகரிகத்துக்கும் என்ன நேர்ந்தது என தெரியாவிட்டாலும், வந்து குடியேறிய ஆரியர்களுடன் அவர்கள் பிற்காலத்தில் கலந்துவிட்டனர். என்றும், குடியேறிய ஆரியர்கள் சிந்து நாகரீகத்தை தங்களுடையதாக சொந்தம் கொண்டாடினர் என்பதும் தெரியவருகிறது.

மேற்கூறியவாறு குடியேற்ற மக்கள் நாடுமுழுவதும் நதியோரங்கள் செழிப்பான பிரதேசங்கள் போன்றவற்றை கண்டு 'ஜனபத' என்ற சிறு குடியேற்ற நாடுகளை ஏற்படுத்தினார். ஒவ்வொரு நாட்டிற்கும்தங்களுள் ஒரு தலைவனையும் தேர்ந்தெடுத்தனர். இவ்வாறான சிறு குடியேற்ற நாடுகளில் குறிப்பிடத்தக்கவையாக பின் கண்டவை இருந்தன. (கி.மு. 11ம் நூற்றாண்டு 5-ம் நூற்றாண்டு)

1. சூரசேனம் (மதுராவை சுற்றியுள்ள பகுதி)
2. உத்தர பாஞ்சாபீம் (ரோகில் கண்டு பகுதி)
3. தட்சிண பாஞசாபீம் (கங்கை முதல் சம்பல் சரை பரவியுள்ள பகுதி)
4. சேதி (யமுனைக்கு தென்பகுதி)
5. கோசல (கோமதி நதிக்கு கிழக்கு, நேபாள குன்றுகளுக்கு தெற்கு பகுதி)
6. காசி (வாரணாசியைசுற்றியுள்ள ஜோன்பூர், காசிப்பூர், மீர்சாபூர் பகுதிகள்)
7. மல்லா (தோரியா மாவட்டமும், சுற்றியுள்ள பகுதிகளும்)
8. மகதா (கங்கை நதிக்கு தெற்கு, சோன் நதிக்கு கிழக்கு, சோடா நாகபூர் பீட பூமியிலுள்ள அடர்ந்த காடுகள்)

9. வங்க (வங்காளம்)

10. தட்சிண கோசல (மேற்கு ஒரிசாவும், கிழக்கு மத்ய பிரதேசமும்)

11. ஆந்திரா (கோதாவரி, கிருஷ்ண நதிகளின் டெல்டா பகுதிகள்)

12. அஸ்மாகா (ஆந்திர பிரதேசத்தை ஒட்டியுள்ள கோதாவரி நதியின் இரு கரை பிரதேசங்கள்)

13. அவந்தி (உஜ்ஜயினி பிரதேவம்)

14. சுராஷ்ட்ரா (சுத்தியவார் பிரதேசம்)

15. காந்தார (ஆப்கானிஸ்தான் எல்லையின் வடமேற்கு பிரதேசம்)

16. குந்தள (மேற்கு மகாராஷ்ட்ரத்தின் சதாரா மற்றும் அதன் சுற்றுபகுதிகள்)

பெரும்பாலும் மேற்கண்ட பகுதிகளில் பிராமண மற்றும் உபநிஷத காலம் எனப்படும். கி.மு. 8ம் நூற்றாண்டில் உலோகத்தை நாணயமாக வைத்திருக்கலாம் என ஆய்வில் தெரியவருகிறது. பிற்காலத்தில் இவை நாணய உருவம் பெற்றிருக்கலாம் எனவும், யாரால் எப்போது, எவ்வாறு நாணயம் உருவம் பெற்றது என்ற ஆதாரம் இல்லையெனவும் அறியப்படுகிறது. ஆனால் இக்குடியேற்ற நாடுகளின் நாணயங்கள் கி.மு. 5 ம் நூற்றாண்டு வரை வழக்கிலிருந்து, பின்னர் கி.மு. 4 ம் நூற்றாண்டில் மகதம் வலுப்பெற ஆரம்பித்ததும், காலக்கிரமத்தில் மறைந்தன என்பதும் ஆய்வாளர்களின் கூற்று.

நாணய வல்லுநர் திரு. பி.எல். குப்தா (நாணயங்கள்) என்ற நூலில் ஒவ்வொரு நாடும் (ஜனபதா) எவ்விதமான நாணயங்களை வெளிவிட்டன என்ற கருத்துகளை ஆராய்ச்சி மூலம் வெளியிட்டுள்ளார். பெரும்பாலான நாடுகள் குத்துக்குறியீடு காசுகளையே **(Pruch Marked Coins)** வெளியிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேற்கண்ட (ஜனபத)குடியேற்ற நாடுகளில் ஒன்றான மல்லா நாட்டு நாணயங்களைப்பற்றி குறிப்பிடு கையில், அவை தடித்த வார்ப்புக்கட்டிகளைப் போன்றவை என்றும், அவைகளில் சாதாரண கோடுகளைக்கொண்டு இரு சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தன

வென்றும் அவை ஒழுங்கற்ற வடிவங்களை உடையவை யாயிருந்தாயும் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விவரங்களுக்கு ஒப்ப உள்ள இரு உலோகத்துண்டு வடிவுடைய நாணயங்கள் என நண்பர் ஒருவரது சேகரிப்பில் உள்ளன.



ஒரு புறம்



மறுபுறம்

தோற்றம்:

விளிம்புகள் ஒழுங்கற்ற வடிவம் காய்ச்சி ஊற்றப்பட்ட உலோகத்துண்டுகள் வடிவில் உள்ளன.



ஒருபுறம்

வரிவடிவங்களில் ஒரு உருவம் (கோட்டுருவம் புடைப்புத்தன்மை)



மறுபுறம்: முறுக்கப்பட்ட கோட்டுருவம் எழுத்துகள் இல்லை.

உலோகம் : வெண்கலம் போன்றது. (வெள்ளி கலப்பு)
எடை : 6.9 கிராம்
குறுக்களவு : சுமார் 2 செ.மி. விட்டம்.

ஆய்வு செய்கையில் இவை மல்லா என்ற குடியேற்ற நாடுகளின் நாணயங்கள் என தெளிவாக தெரியவருகிறது. இவை கி.மு. 5 ம் நூற்றாண்டினைச் சேர்ந்தவையாதலால் மிக அரிதென தெரியவருகிறது.

இந்நாணயங்களை ஆய்வுக்கு கொடுத்துதவிய நண்பர் திரு. டி.டி. சுந்தரம் அவர்களுக்கு நன்றி.

---

**ஆதாரம்:**

நாணயங்கள் (பரமேஸ்வரிலால் குப்தா) 1978 வருடபதிப்பு.



# மைசூர் உடையார் வெளியிட்ட காசுகள் - ஒரு வரலாறு

லயன். எச்.ஏ. நசீர்
செயலர்,
சோழமண்டல நாணயவியல் கழகம்.

கர்நாடகம் என்ற பெயர் கருநாடு என்ற பெயரிலிருந்து மருவி வந்துது. உயர்ந்த பீடபூமி என்ற பொருளுடையது. இதிகாச காலத்தில் பெல்லாரி மாவட்டத்திலுள்ள 'ஹம்பி' என்ற இடம் இராமாயண காவியத்தில் வரும் வாலி, சுக்ரீவன் என்ற அரசர்களின் தலைநகராக இருந்ததாக கூறப்படுகிறது. அகஸ்திய முனிவர் குறிப்பிடும் 'வாதாபி' எனும் இடம் பீஜப்பூர் மாவட்டத்திலுள்ள பாதாமமிஎன்ற இடத்தினன்றுபெயராகும்.

கி.மு. 4 -ம் நூற்றாண்டில் மௌரிய பேரரசின் ஒரு பகுதியாகவே கருநாடகம் இருந்தது. சுமார் கி.மு. 30-ல், சதவாகனர் என்ற வகுப்பினர் ஆட்சிக்கு வந்து சுமார் 300 ஆண்டுகள் தொடர்ந்து அரசாண்டனர். சதவாகன வமிசம் சிதைந்த பிறகு வடக்கே கடம்பர்களும் தெற்கே கங்காக்களும் ஆட்சிக்கு வந்தனர். இன்றும் 'சரவண பெல்கோல' வில் உள்ள பிரம்மாண்ட கோமதேஸ்வரா சிலை கங்கா ஆட்சியரின் ஒரு ஞாபகர்த்தமாக உள்ளது.

கி.பி. 6-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் சாளுக்கியர்கள் புது ஆட்சி அமைத்தனர். அவர்களுக்குப் பிறகு தேவகிரியின் யாதவர்களும், துவார சமுத்திரத்தின் ஹொய்சாலர்களும் கர்நாடகத்தை அவர்களுக்குள் பிரித்தாண்டனர்.

கி.பி. 14-ம் நூற்றாண்டில் விஜயநகர சாம்ராஜ்யம் ஹரிஹரர், புக்கர் ஆகியோரால் ஸ்தாபிக்கப்பட்டது. அது ஒரு வளம்மிக்க, புகழ் பெற்ற காலமாகும். கி.பி. 1565-ல் முஸ்லீம் சுல்தான்களின் ஒரு கூட்டணி தளிக்கோட்டை சண்டையில் விஜயநகர சாம்ராஜ்யத்தை சிதைத்தது. ஹாஸ்பெட்டின் அருகிலுள்ள ஹம்பியில் உள்ள சிதைந்த

கட்டிடங்கள், விஜயநகர சாம்ராஜ்யத்தின் புகழை இன்றும் நிலை நிறுத்திக் கொண்டிருக்கின்றன.

கி.பி. 1399-ல் மைசூரில் இருந்த ஒரு சிறு ஆட்சியாளரான 'யாது ராயா' என்பவர் உடையார் வம்ச ஆட்சியை நிறுவினார். (கி.பி. 1578-1612) ராஜா உடையார் என்ற பின்பு வந்த அரசர் சீரங்கப்பட்டணத்தை தலைநகராக்கி, ஆட்சி எல்லையை விரிவுபடுத்தினார். அலியால் உடையார் அரசாட்சி வீழ்த்தப்பட்டது. பிறகு முதலாம் மைசூர் போர் (கி.பி. 1767-69) இரண்டாம் மைசூர் போர் (1780-84) ஆகியவற்றில் ஆங்கிலேயரால் ஹைதர் அலி தோற்கடிக்கப்பட்டு, பின் பட்டத்துக்கு வந்த ஹைதர் அலியின் மகன் திப்புசுல்தானும் சீரங்கப்பட்டணத்தில் நடந்த மூன்றாம் மைசூர் போரில் (கி.பி. 1790-92) ஆங்கிலேயருடன் உடன்படிக்கை ஏற்படுத்தி தொடர்ந்து அரசாண்டார். ஆனால் கி.பி. 1799-ல் நடந்த நான்காம் மைசூர் போரில் திப்பு சுல்தான் ஆங்கிலேயரால் தோற்கடிக்கப்பட்டு மைசூர் துண்டாடப்பட்டது. ஆங்கிலேயர் அரசாட்சியில் இருந்த கர்நாடகப் பகுதியானது மைசூர் அரசாட்சி பகுதி, ஹைதராபாத் மற்றும் பம்பாய் மற்றும் சென்னை மற்றும் குடகு நாடு என்ற பல பகுதிகளுக்கு பிரித்து கொடுக்கப் பட்டது.

மேற்கூறிய மைசூர் பகுதியை கி.பி. 1799-ல் கிருஷ்ணராஜ உடையார் தனது 6-வது வயதில் கைப்பற்றினார். தங்கத்தாலான பகோடா, அரை -பகோடா, ஃபணம் என்ற நாணயங்களும், அவைகளைத் தொடர்ந்து முன்புறத்தில் ஹர-கௌரி உருவமும், பின் புறத்தில் நாகரி மொழியில் ஸ்ரீ கிருஷ்ணராஜா என்ற பெயர் பொறித்த நாணயங்களும் வெளியிட்டார். முகலாய பாணியில் வெள்ளி ரூபாய் மற்றும் அதன் குறை மதிப்பு நாணயங்களும் இரண்டாம் ஷா-ஆலம் என்ற மன்னரின் பெயரை முன்புறத்திலும், 'மகிசூர்' என்ற நாணயச்சாலையின் பெயரை பின்புறத்திலும் தாங்கிய முகலாய மரபுடன் கூடிய நாணங்களும் வெளியிட்டனர். இவை தவிர கிருஷ்ணராஜ உடையாரின் குல தேவதையான 'சாமுண்டி' உருவம் தாங்கிய சிறுநாணயங்களும் வெளியிட்டனர். கிருஷ்ணராஜ உடையாரால் ஆரம்ப காலத்தில் வெளியிடப்பட்ட நாணங்களில் சிங்கம் (சரலோ), சூரியன் மற்றும் சந்திரன் ஆகிய உருவங்களிருந்தன. பிற்காலத்தில் செப்புக் காசுகளில் யானை உருவத்தை முன்புறத்தில் பொறித்துள்ளனர். அதனுடன் 'ஸ்ரீ சாமுண்டி' என்ற வார்த்தைகளும் இடம் பெற்றுள்ளவாறு செய்யப்பட்டது. 1843-ம் அண்டு வரை மைசூரிலேயே நாணயங்கள் அச்சடிக்கப்பட்டன.

இவர்கள் வெளியிட்ட காசுகளில் தேவ நாகரி, கன்னடம், பார சீகம் மற்றும் ஆங்கில எழுத்துக்கள் கையாளப்பட்டிருந்தன. என்னிடமுள்ள சில உடையார் வம்ச காசுகளின் விபரங்கள் வருமாறு:

**1. டபுள் பகோடா**



**முன்புறம்**

கையில் சங்கு சக்கரம் தாங்கிய நிலையில் ஆலவட்டத்தின் கீழ் விஷ்ணு நின்ற நிலையில்.



**பின் புறம்:**

தேவநாசரி மொழியில் ஸ்ரீ கிருஷ்ண தேவராயா என்ற எழுத்துக்கள்.

உருவம் - வட்டம் எடை: 7.65 கிராம்

உலோகம்: தங்கம்.

**2. பகோடா மற்றும் அரை பகோடா:**



சிவன் மற்றும் பார்வதி உருவங்கள் - சிவன் கையில் சூலம், உடுக்கை.



**பின்புறம்:**

தேவநாகரி மொழியில் 'ஸ்ரீ கிருஷ்ண ராயா' என்ற எழுத்துக்கள்.

எடை: 3.45 கி. 3.50 கி தங்கம்

**3. சிறிய அரை ப'கோடா:**



**முன்புறம்:**

சிவன் மற்றும் பார்வதி உருவங்கள் - சிவன் கையில் சூலம், உடுக்கை.



**பின்புறம்:**

தேவநாகரி மொழியில் 'ஸ்ரீ கிருஷ்ணராஜா' என்ற எழுத்துக்கள்.

எடை: 3.45 கி. 3.50 கி தங்கம்

*4. கந்தர்வ பணம்*



முன்புறம்:
அமர்ந்த நிலையில் விஷ்ணு.



பின்புறம்:
ஸ்ரீ-கந்திர-வ என நாகரி எழுத்துக்கள்.

எடை: 0.35 கிராம் தங்கம்.

*5. சற்று பெரிய அளவு:*



முன்புறம்:
அமர்ந்த நிலையில் விஷ்ணு.



பின்புறம்:
ஸ்ரீ கந்திர-வ என நாசரி எழுத்துக்கள்.

எடை: 0.40 கிராம் தங்கம்.

*6. ஷா ஆலம் (இரண்டு) நாணயங்கள்:*



முன்புறம்:
பாரசிக மொழியில் ஷா ஆலம் II ஹிஜிரா 1222



பின்புறம்:
பாரசிக மொழியில் ஜாப் மஹிசூர் சனத்
(ரெக்னல் ஆண்டு) 64

*7. மற்றொரு நாணயம்:*



முன்புறம்:
ஆடும் நிலையில் சாமுண்டீஸ்வரி.



பின்புறம்:
பாரசிக மொழியில் கிருஷ்ணராஜ உடையார்
ஜலூஸ் ஜாப்மஹிசூர் ஹிஜ்ரா - 1247.

எடை. 2.90 கி. வெள்ளி.

இந்த ஆய்வுக்கு உதவிய உறுப்பினர் திரு. எஸ். சந்திரசேகரன் அவர்களுக்கு நன்றி!

உடையார் வம்சத்தினர் யானை மற்றும் சிங்கத்தினை பல வடிவங்களில் தங்களால் வெளியிடப்பட்ட நாணயங்களில் பொறித்துள்ளனர். அவைகளின் சில வடிவங்கள் வருமாறு.





# செல்லாத காசுகள்

டாக்டர். சோ. தியாகராசன்,
உறுப்பினர், திருச்சிராப்பள்ளி நாணயவியல் கழகம்

இந்திய நாடு பல்வேறு வளங்களில் சிறந்து விளங்கி, செல்வம் கொழிக்கின்ற நாடாக உள்ளது என்று கேள்விப்பட்ட அந்நிய நாட்டு பேராசைக்காரர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து இங்கிருந்து விலை மதிப்பில்லாத பொருட்களையும், அத்தோடு பல்வேறு நாட்டினர்களிடமிருந்து பெற்ற தங்கம், வெள்ளி மற்ற உலோக நாணயங்களையும் கொள்ளையடித்து மூட்டை மூட்டையாகக் கட்டி யானை, குதிரை மற்றும் ஒட்டகங்களின் மீது ஏற்றி தங்கள் நாட்டிற்கு கொண்டு சென்றனர். அப்படி கொள்ளையடித்த பொருட்களில் மிகவும் அரியது கலைப்படைப்பான தங்க மயில் ஆசனமும் ஒன்றாகும்.

இதில் குறிப்பிட்டு சொல்லக்கூடியவர்கள், கஜனிமுகமது, கோரிமுகமது ஆகியோர். இவர்களுக்கு நாடுபிடிக்கும் ஆசையைவிட இந்தியாவை ஓடு எடுக்கவைக்க வேண்டும் என்ற எண்ணமே மிகுந்திருந்தது.

இவர்கள் கொள்ளையடித்தது போதாது என்று பிற்காலத்தில் மாலிக்காபூர் என்பவர் தென்னாட்டின் கோடி வரை படையெடுத்து கையில் கிடைத்த தங்கம், வெள்ளி, நகைகள் நாணயங்கள், மற்றும் கலைப்படைப்புக்கள் ஆகியவற்றை கொள்ளை அடித்தான். கொள்ளை அடிக்க இயலாத கோவில்களில் சிலைகளை உடைத்தனர்.

மேற்குறிப்பிட்டவர்கள் யாவரும் வெளிநாட்டுக் கொள்ளைக்காரர்கள். ஆனால் அவ்வப்போது உள் நாட்டு கொள்ளைக்காரர்களும், கப்பலில் வரும் வணிகர்களையும் பயணிகளையும் தாக்கி கொள்ளையடிக்கும் கடல் கொள்ளைக்காரர்களும் இருந்து வந்தனர் எனவே மக்கள், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கொள்ளைக்காரர்களுக்கு அஞ்சி தங்களது உடமைகளை பல்வேறு முறைகளில் பாதுகாத்து வந்தனர்.

தங்கள உடமைகளைப் பாதுகாக்கும் பல்வேறு முறைகளில் மிகவும் பாதுகாப்பானது, மற்றும் ரகசியமானது என்று பொருட்களை பூமியில் புதைத்து வைப்பதும் ஒரு முறையாக கடைபிடித்து வாழ்ந்து வந்தனர்.

இப்படி பூமியில் பொருட்களைப் புதைத்துவைக்கும் மூடப் பழக்கத்தைக் கண்டித்து ஔவையார் பாடிய ஒரு நீதிப்பாடல்

''பாடுபட்டுத் தேடி பணத்தைப் புதைத்து வைக்குங்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்
கூடுவிட்டு ஆவிதான் போன பின்னே
யாரோ அனுபவிப்பார் பாவிகள் இந்தப்பணம்''

இப்படி மனிதனின் குணாதிசயம் இருந்து வந்தகாலங்களில் புதைத்துவைத்தவர்கள் பொருட்களை மறந்துவிடுவது, புதைத்த இடத்தை மறந்து விடுவது, யாரிடமும் சொல்லாமல் மரித்துவிடுவது ஆகிய நிலைகளில் அந்தச் செல்வம் பல நூற்றாண்டு காலமாக பூமிக்குள்ளேயே புதையலாக இருந்தும் வத்தன, இன்றும் இருந்து வருகின்றன.

பிற்காலச் சந்ததியினர் பல்வேறு காரணங்களுக்காக பூமியைத் தோண்டும் போதும் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் தொல்லியல் துறை ஆராய்ச்சியாளர்கள் தங்களுடைய பணிகளை மேற்கொள்ளும் போதும் அந்தப் புராதண புதையல்கள் வெளிப்படுகின்றன.

அந்தப் புதையலில் உள்ள நாணயங்கள் மற்றும் இதர பொருட்களை ஆராய்ச்சி செய்யும்போது நாணயங்களின் உலோகத்தரம் நாணயங்கள் வெளியிடப்பட்ட காலம், காரணம் மற்றும் அன்றைய, கலை, கலாச்சாரம் அரசியல் நிலை, அரசனின் நிலை என்று பல்வேறு கூறுகளுக்குச் சான்றாக அமைகிறது.

இந்தப் பொருட்கள் ஆராய்ச்சியாளர்கள் கையில் கிடைத்தால் அற்புதமான வரலாற்று உண்மைகளுக்கு சான்றாகும். இவைகள் சாதாரணமானவர்களிடம் கிடைத்தால் அப்போதைக்கு அந்த புதையலில் இருக்கும் விலை மதிப்பற்ற நாணயங்களுக்குப்பெயர் ''செல்லா காசுகள்'' என்பது தான்.

இப்படி செல்லா காசுகளாக மதிக்கப்பெற்ற விலை மதிப்பில்லா அரிய நாணயங்களைத்தான் இன்றைய நாணயவியல் கழகத்து அங்கத்தினர்கள் மிகவும் சிரமப்பட்டு சேகரித்து பொது மக்களுக்கும், தொல்லியல் துறையினர்களுக்கும் பல்வேறு விதமான வரலாற்று செய்திகள் கிடைக்க உதவுகிறார்கள். இதை ஒரு பொழுதுபோக்கு என்று கூறுவது எவ்விதம் பொருந்தும் என்பது கேள்வியே! இது ஓர் அரிய சமூகத் தொண்டு என்று சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

சாதாரண மக்களுக்கு செல்லாதகாசாக தோற்றமளிக்கும் பழங்கால நாணயங்களைச் சேகரித்து தொகுத்துவைப்பது அதைப்பற்றி விவாதிப்பது, உரிய நேரத்தில் கண்காட்சிகளில் வைத்து பொது மக்களைப் பார்வையிடச் செய்து அதன்மூலம் அவர்களுக்கு வரலாற்று உண்மைகளில் பொதிந்துள்ள நிகழ்ச்சிகளை நினைவு படுத்துவதும் நமது கடமையாகும்.

புதையல்களாகக் கிடைக்கும் நாணயங்களை உரிய முறையில் தொகுத்து அதை அருங்காட்சியகங்களில் வைத்துப் பராமரிப்பின் மூலம்பொது மக்களுக்கு அரிய செய்திகளைக் கொடுக்கமுடியும். அதன்மூலம் மக்களுக்கு நிச்சயம் வரலாறு பற்றிய விழிப்புணர்ச்சி ஏற்படும்.

வருங்கால சந்ததியினர்களைக் கவர அவ்வப்போது கண்காட்சிகளை ஏற்படுத்தி பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்களும் பார்க்க ஏற்பாடு செய்வதன்மூலம் வருங்காலத்தில் நாணயவியல் கழகம் நாட்டின் மிகவும் முக்கியமானதொரு இயக்கமாக வளர்ந்துவிட நிச்சயம் வழி வகுக்கும்

மேற்கண்ட செய்திகள் மூலம் மக்களிடம் ஏதும் அற்புதமான நாணயங்கள் இருந்து அவைகளை 'செல்லாதகாசுகள்' என்று அவர்கள் அலட்சியப்படுத்தினால், அந்த நாணயங்கள் காலப்போக்கில் அழியும் போது அத்தோடு அரியதொரு வரலாறும் அழிந்துவிட வாய்ப்பு ஏற்படும். எனவே பழங்கால நாணங்களைப் பாதுகாக்க வேண்டிய விழிப்புணர்ச்சியினை மக்களிடம் ஏற்படுத்துவதன் மூலம் இனி வருங்காலங்களில் செல்லாத காசுகள்' என்னும் இனம் இல்லவே இல்லை எனலாம்.



# குதிரைவீரன் காசுகள்

**தி.து.சுந்தரம்**, உறுப்பினர்,
தஞ்சை சோழ மண்டல நாணயவியல் கழகம்.

நமது நாட்டின் வரலாற்றில் பொற்காலமாக விளங்கிய குப்தர்களின் ஆட்சியின் சரிவுக்குப் பிறகு கி.பி.12-ம் நூற்றூண்டிலிருந்து நாணய வரலாற்றில் முகமதிய அரசர்களின் கை ஓங்கியிருந்தது. அதற்கு இடைப்பட்ட காலத்தில்,அதாவது கி.பி. 5ம் நூற்றூண்டிற்குப்பின் ஆண்ட அரச வம்சங்களின் நாணய வெளியீடுகள் குறிப்பிடும்படி இல்லை என்றே சொல்லவேண்டும். தங்க நாணயங்கள் மிக அரிதாகவும், வெள்ளி நாணயங்கள் மிகச்சிலவும், செப்பு முதலிய உலோகத்தால் ஆன நாணயங்களும் குறைந்த அளவில் இருந்தன. நாடும் பல சிறு பகுதிகளாகப்பிரிந்து பல்வேறு அரசர்களின் ஆளுமைக்குட்பட்டிருந்தது.குறிப்பாக 'ஹூன்' வம்ச அரசரான 'தோரமான' இந்தியா மீது படையெடுத்து நாடடின் மேற்கில் பெரும்பகுதியை வசப்படுத்தினார். அவரது மகன் மிகிராகுலன் வட இந்தியாவின் பெரும்பகுதியை கைப்பற்றினார். பின்னர் மிகிராகுலன் இந்திய இளவரசர்களால் தோற்படிக்கப்பட்டு ஹூனர்களின் ஆட்சிப்பகுதி வடஇந்தியாவில் காஷ்மீரும் அதைச்சுற்றிய பகுதியாகவுமிருந்தது. இவர்கள் தங்கள் உருவங்களைக்கொண்ட நாணயங்களை வெளியிட்ட போதிலும், குப்தர் காலத்து நாணயங்கள் போல் சிறப்புடையதாய் இல்லாததால் அவைகளின் புகழ் மங்கத்தொடங்கியதுடன் நாணய வெளியீடுகள் குறிப்பிடும்படியாக இருக்கவில்லை.

இக்காலத்தில்தான் சுமார் கி.பி. 9ம் நூற்றூண்டின் கடைசிப்பகுதியில் 'ஷாஹி' என்ற வம்சம் காபூல் அல்லது காந்தாரம் என்ற பகுதியை ஆண்டது. இந்த வம்சத்து அரசர்கள் தங்களுக்கென்று தனிப்பட்ட மாதிரியில் சில வடிவங்களுடன் செம்பு மற்றும் வெள்ளியில் நாணயங்களை வெளியிட்டனர். இம்மாதிரி வெளியிட்ட நாணயங்களில்தான் ஒருபுறம் குதிரைமேல் வீற்றிருக்கும்

ஒருவரின் உருவமும், அவரது வலது கையில் நீண்ட ஈட்டியும,இடது கையில் தெளிவுறாத ஒரு பொருளும், மற்றொரு பக்கத்தில், இடதுபுறம் நோக்கியவாறு, உயர்ந்த திமிலுடன் அம்பாரித்துணி போர்த்தி, உட்கார்ந்த நிலையிலுள்ள ஒரு காளையின் உருவமும் பொறிக்கப்பட்டிருந்தன. இம்மாதிரியான காசுகள் இவ்வம்சத்து முதல் அரசரான 'ஸ்பலபதிதேவ' என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அவரைத்தொடர்ந்து பல ஆட்சியாளர்களும், அதே உருவமுடைய காசுகளையே வெளியிட்டதாகவும் தெரிகிறது. அவர்களுள் முக்கியமானவர் 'சாமந்ததேவா' என்பவராவார். இக்காசுகள் வட இந்தியா முழுவதும் வழங்கப்பட்டு மிக்க புகழ் பெற்றிருந்தாகத்தெரிகிறது. சமந்த தேவாவின் காலத்துக்குப்பிறகும் அவை அதே வடிவத்துடன் வழங்கப்பட்டன. கி.பி. 12 மற்றும் 13 ம் நூற்றாண்டுகளில் கூட பல ஆட்சியாளர்களும் குதிரைவீரன் காசுகள் **(Horsemen type coins)** எனப்புகழ்பெற்ற இக்காசுகளை வெளியிட்டதாக அறிகிறோம். இக்காசுகளில் உருவங்களை மட்டுமன்றி சமந்ததேவாவின் பெயரை காளை உருவத்தின் பக்கத்திலும் குதிரைவீரன் அருகே தங்களது பெயரையும் குறிப்பிட்டிருந்தனர் எனவும் தெரிகிறது. இதற்கான காரணம் வரலாற்றில் தெளிவாக இல்லை.

இம்மாதிரியான 'குதிரைவீரன் காசுகளை' வெளியிட்ட பிற்கால அரசர்களான தோமார வம்சத்தைச்சேர்ந்த ஸல்லகடிணபாலா மற்றும் அனங்கபாலா, கஹாதபாலா வம்சத்து மதனபாலதேவா, சாமான வமிசத்து சாகம்பரி, சோமேஸ்வர தேவா மற்றும் பிருத்விராஜா ஆகியோர் 'ஜாஜபெல்லா' வமிசத்து 'ஆசல்லதேவா' மற்றும் 'கணபதி' ஆகியோரும் குதிரைவீரன் அல்லது காளை உருவத்தினை ஒருபக்கத்திலும் மற்ற பக்கத்தில் தங்கள் பெயரையும் பொறித்து நாணயங்களை வெளியிட்டனர்.

இவ்வாறாக குதிரைவீரன் காசுகள் கி.பி.9ம் நூற்றூண்டிலிருந்து 13ம் நூற்றாண்டு வரை, சுமார் 400 ஆண்டு காலத்துக்கு வழங்கப்பட்டன. இது தவிர சம காலத்தில் மத்திய இந்தியாவில் சில அரசர்களால் நான்கு கைகளையுடைய லட்சுமி உருவம் தாங்கிய காசுகளையும் பிற்காலத்தில் முகம்மது கோரி என பெயர் பெற்ற

முகமது பின் சாம் என்ற முகமதிய அரசரால் கூட வெளியிடப்பட்டுள்ளன. இவ்வரசராலும் அவரது வழித்தோன்றல்களாலும் கூட குதிரைவீரன் காசுகள் (செம்பு+வெள்ளி) 'பில்லான்' என்ற உலோகத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. வரலாற்றாய்வாளர்கள் வழியே தெரிந்தது.

பல நாணயச் சேரிகரிப்பாளர்களிடமும் இக்குதிரைவீரன் காசுகள் சேகரிப்பில் காணப்படுகின்றன. ஆனால் வடிவங்கள் ஒரு பார்வைக்கு குதிரைவீரன் போன்றோ, அல்லது காளை போன்றோ தோன்றுவதில்லை. ஊன்றிப்பார்த்தால்தான் அவ்வடிவம் கண்ணுக்கு புலனாகும்.

டெல்லி சுல்தான்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் எனப்பொருள்படும் **(Coins of Delhi Sulthan)** என்ற புத்தகத்தில் அதன் ஆசிரியர் திரு. டேனிஷ் மெயின் குறிப்பிடுகையில் முகமது கஜினியின் வழித்தோன்றல்களான மசூத் மௌதாத் ஆகியோர் இதே குதிரைவீரன் காசுகளை வெள்ளி உலோகத்தில் வெளியிட்டதாகவும் ஒருபுறத்தில் அராபி மொழியில் தங்களது பெயரை பொறித்திருந்ததாகவும் குறிப்பிடுகிறார்.

மேற்கூறியவற்றிலிருந்து இக்குதிரைவீன் காசுகள் பலவடிவத்தில் எழுத்துக்குறிப்புகளுடனும் இல்லாமலும் பல அரசர்களால் பல்வேறு காலத்தில் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது.

எனது சேகரிப்பில் மூன்று குதிரைவீரன் காசுகள் உள்ளன. இரண்டு வெள்ளி ஒன்று செப்பு வெண்கல கலப்பு.



முன்புறம்



பின்புறம்

## 1. வெள்ளிக்காசு:

ஒருபுறம்-வலதுபுறம் திரும்பியிருக்கும் குதிரைமேல் ஒருவீரன் வலதுகையின் நீண்ட ஒரு ஈட்டி அல்லது கோலை பூமியில் ஊன்றியிருக்கிறான். இடது கையில் அடையாளம் காணவியலாத ஒரு பொருள். எழுத்துக்குறிப்புகளில்லை.

மறுபுறம் - இடதுபுறம் நோக்கி காலை மடித்து உட்கார்ந்திருக்கும் ஒரு காளை உருவம். திமில் மேல் நோக்கியுள்ளது. முதுகில் போர்வைத் துணி முதுகில் மேல்புறமாக விளிம்பில் ஸ்ரீ சமந்த தேவ என நாகரி எழுத்துக்கள்.

1. வடிவம் -வட்டம்
2. அளவு - 20 மிமீ
3. எடை - 3 கி. 25 மில்



முன்புறம் பின்புறம்

## 2. வெள்ளிக்காசு:

மேற்கூறியபடி முன்புறம் இருபக்கங்களிலும் எழுத்துப்பொறிப்புகள் இல்லை.

1. வடிவம் -வட்டம்
2. அளவு - 20 மிமீ
3. எடை - 3கி. 13 மில்



முன்புறம்



பின்புறம்

## 3. செப்புக்காசு: (வெண்கலகலப்பு)

மேற்கூறியபடி

1. அளவு - சுமார் 11 மிமீ
2. வடிவம் : வட்டம்
3. எடை - 3கி. 45 மில்

இவை சுமார் 1100 ஆண்டுகளுக்கு முந்தையது என்பதால் பழங்காசு எனவே இலைகளைக் கருதலாம்.

குறிப்பு:

இக்காசுகளின் முழு விபரங்களை ஆய்வு செய்தும், வரலாற்றின் அடிப்படையில் இக்கட்டுரை அமைய பெரிதும் துணைபுரிந்த நாணய ஆய்வாளர் திரு. எஸ். சந்திரசேகரன் அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆதாரம்:

1. Coins (by P.L. Gupta)
2. Coins of Delhi sultans (by Davish Main)

# மகா அலெக்சாண்டர் உருவ காசு

தி.து.சுந்தரம்
உறுப்பினர், சோழமண்டல நாணயவியல் கழகம்

மாசிடோனியா என்பது ஐரோப்பிய கண்டத்திலுள்ள கிரேக்க நாட்டின் பழைய சரித்திரப் பெயராக இருப்பினும், இன்றும் கிரீஸ் நாட்டின் வடபுறத்தில் மாசிடோனியா என்ற சிறுநாடு ஒன்று உள்ளது. பழைய மாசிடோனியா நாட்டினை ஆண்டுவந்த இரண்டாம் பிலிப் அரசன் கி.மு. 336 ம் ஆண்டில் கொலையுண்ட பிறகு, அவரது மகனான அலெக்சாண்டர் தனது இருபதாவது வயதில் பட்டத்திற்கு வந்தான். அரிஸ்டாட்டில் என்ற தத்துவஞானியால் கல்வியூட்டப்பட்ட அலெக்சாண்டர் திறமை, உடல்வலிமை, சக்தி மற்றும் குறிக்கோள் ஆகியவற்றை உடையவனாக இருந்தார். தனது பதினாறாவது வயதிலேயே சிரோனியா படையெட்டுப்பு மூலம் தனது திறமையினை விளக்கினார். தனது தந்தையின் காலத்திலேயே நாட்டின் வடபுறத்தில் எழுந்த குடியினரின் கலகத்தை அடக்கியும், இதர கலகக்காரர்களை அடக்கியதோடன்றி, தந்தை இறந்து பனிரெண்டு மாதகாலத்துள் தனது ஆட்சியினை முழுமையான அளவில் நிலைநிறுத்தினார்.

கி.மு. 334 ல் அலெக்சாண்டர் பாரசீகப்பேராசின் மீது படையெடுத்து ஐந்தாண்டுகளுக்குள் அப்பேரரசு முழுவதையும் தனது ஆளுகைக்கு உட்படுத்தினார். உலகில் உள்ள அறியப்படுகிற எல்லா நாடுகளையும் கைப்பற்றி தனது ஆட்சியின் கீழ் கொண்டுவரவேண்டும் என்ற பேரவா அவருக்கிருந்தது. அந்நாடுகளில் இந்தியாவையும் மிக முக்யமானதெனக்கருதினார். ஏனெனில் கி.மு. 6 ம் நூற்றாண்டிலிருந்தே இந்தியாவுக்கு பயணம் செய்த யாத்ரீகர்கள், இந்தியாவின் வளமையையும் செல்வ செழிப்பையும் கர்ண பரம்பரை கதைகளாக உருவாக்கினர்.

பின்னர் கி.மு. 330 ல் ஹெல்முண்ட், வடமேற்கு பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் வழியாக பாக்டீரியா செல்வதற்காக ஹிந்துகிஷ் மலையை அடைந்தான் மத்ய ஆசியாவிலுள்ள சில பகுதிகளை முற்றுரிகையிட்டபின் கி.மு. 327 ல் காபூல் கணவாய்க்கு திரும்பிசென்றான். சிறிது இளைப்பாறலுக்குப்பின் கி.மு. 327 ல் இந்தியாவை படையெடுக்கும் நோக்கத்துடன் கைபர்கணவாய் வழியாக வடக்கு நோக்கி சென்றார். பிறகு தனது முழுபடைபலத்துடன் (சுமார் 80,000 வீரர்கள்) வடமேற்கு இந்தியாவிலுள்ள பெரிய நகரான தட்சசீலத்தை அடைந்தார். அலெக்சாண்டர் படையெடுத்த காலத்தில் வடமேற்கு இந்தியாவில், பெருவாரியான எண்ணிக்கையில் சிறுதலைவர்களும், தனிப்பட்ட குடியேற்றங்களும் இருந்தன. இவை அனைத்தும் ஒரு பொதுவான எதிரியினை எதிர்த்து போரிடும் வண்ணம் ஒற்றுமையாக இராததோடு, ஒன்றுக்கொன்று எதிரிகளாகவும், பொறாமை கொண்டும் இருந்தன.

தட்சசீலத்தில் எதிரியான அலெக்சாண்டரை போரிட வேண்டிய நிலையில் இருந்த 'அம்பி'என்ற தலைவன் அலெக்சாண்டரை வரவேற்றான். ஆகவே அலெக்சாண்டர் அவரை எதிர்த்த பௌரவா (போரஸ்)என்ற மன்னரை எதிர்கொள்ள ஜீலம் நதியோரம் சென்றார். தனது படை இருக்கும் ஆற்றின் கரைக்கு எதிர்சரையில் பேரரசின் படை குவிக்கப்பட்டிருப்பதைக்கண்டு, திட்டமிடும் சாக்கில் சில நாட்களை எதிர்த்து எதிரியினை ஏமாற்றி பேராசின் படையினை தந்திரமாக முறியடித்தார். பிறகு பேரரசின் மீது பெருந்தன்மை கொண்டு நாட்டினை திரும்ப கொடுத்து நட்புரிமை பெற்றார்.

நாட்டினைப்பிரிந்து பலநாட்கள் ஆனதாலும் தனது மனைவி மக்களைப்பிரிந்து படைவீரர்கள் வெகுநாட்களானதாலும் படையினர் நாடுதிரும்ப கோரினர். ஆகவே மூன்றாண்டு காலம் இந்தியாவில் இருந்தபோது அம்பி, பௌரவா போன்ற சிற்றரசர்களின் நட்புடனும் அவர்களை அவர்களது நாடுகளுக்கே ஆளுநர் ஆக்கினார். பல

துறைமுகங்கள் கட்டவும், நகரங்களை நிர்மாணிக்கவும் திட்டமிட்டார். தனது ஆட்சியினை இந்தியாவில் நிரந்தரமாக நீட்டிக்கும் திட்டமுடனே இவ்வேற்பாடுகளை அவர்செய்ததாகத் தெரிகிறது. ஆனால் அலெக்சாண்டர் இந்திய நாட்டை விட்டுக்சென்ற மூன்றுமாத காலத்துள்ளேயே தனது 33 வது வயதில் அகால மரணமடைந்தார்.

அலெக்சாண்டர் படையெடுப்பினால் இந்திய ஐரோப்பிய வர்த்தகம் செழிக்கவும், மேற்கத்திய நாடுகளுடன் வர்த்தக தொடர்பு வலுவடையவும் காரணமாயிற்று. இருநாடுகளுக்குள்ளான கலைபரிமாற்றங்களும் ஓரளவு ஏற்பட்டது. ஒற்றுமையின்மையால் எதிரியினை எதிர்க்கும் திறன் குறைந்தால், வலுவான நாடு அரசு தோன்ற வேண்டியது அவசியமாயிற்று. இவ்வாறு அலெக்சாண்டர் படையெடுத்த காலத்தில் சிற்றரசனான மசுதவமிசத்து அரசன் சந்திரகுப்தன் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி பெரும்படையினை திரட்டி பேரராசனானான்.

எது எப்படியாயினும், கிரேக்கநாட்டுடன் இந்தியாவுக்கான வெளிநாட்டுநாணயத்தொடர்பு அலெக்சாண்டரின் மறைவுக்குப் பின்னரே ஏற்பட்டது. அலெக்சாண்டர் வென்ற நாடுகள் அவனது மறைவுக்குப்பின் அவரிடத்தில் படையிலிருந்த பலம்பொருந்திய அலுவலர்களால் சிறு பகுதிகளாக்கப்பட்டு ஆதிக்கத்திற்குட்படுத்தப் பட்டது. கி.மு. 250 ல் பாக்டீரியா நாட்டு அதிகாரியான டயோடோடஸ் மற்றும் அவனுக்குப்பின் வந்தவர்களால் நாணயங்கள் வெளியிடப்பட்டன. இந்த இந்தோ பாக்டீரிய ஆட்சியாளர்கள், அதுவரை இந்தியர்களுக்கு தெரிந்திராத முறையில் கிரேக்க பாணியில் அச்சடிக்கும் நுணுக்க முறையைக் கையாண்டு நாணயங்களை வெளியிட்டனர். அவர்கள் இந்திய நாணயவெளியீட்டில் பல புதுமுறைகளைக்கையாண்டனர். முதலாவதாக நாணயங்களின் முன்புறத்தில் அரசர்களின் உருவங்களை பொறித்தனர். இரண்டாவதாக நாணயங்களின்

பின்பிறத்தில் கிரேக்க தெய்வங்கள் மற்றும் தேவதைகளின் உருவங்களையும் பொறித்தனர்.

இவ்வாறு வெளியிடப்பட்ட நாணயங்களில் ஒன்று என் சேகரிப்பில் உள்ளது. அதன் விபரம் வருமாறு.



முன்புறம்

சிங்கத்தின் பிடரித்தோலை போர்த்திய அலெக்சாண்டரின் கழுத்துவரையிலான உருவம் வலதுபுறம் நோக்கியுள்ளது. எழுத்துப்பொறிப்புகள் இல்லை.



பின்புறம்

கிரேக்க நெருப்புக்கடவுளான ஜீயஸ் **(Zeus)** அமர்ந்த நிலையிலான இடதுபுறம் நோக்கிய தோற்றம் வலது கையில் கழுகும் இடது கையில் நீண்ட ஈட்டியும் கீழே கேடயமும் இருமருங்கிலும் விளிம்பில் கிரேக்க எழுத்துகள் தெளிவாக இல்லை.

| | | | | |
|---|---|---|---|---|
| உலோகம் | : | செப்பு | தோற்றம் : | வட்ட வடிவம் |
| விட்டம் | : | 30 மி.மீ | எடை : | 17.75 கி |
| காலம் | : | கி.மு. 336 | | |

வல்லமை பொருந்திய அலெக்சாண்டர் உருவம் தாங்கிய இந் நாணயம் முக்கியத்துவம் பெறுகிறது. இதனை அலெக்சாண்டரின் ஆட்சிக் காலத்திலேயே வெளியிடப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது.

**ஆதாரம்:**

1. Coins (by P.L. Gupta)
2. A History of India Part I
3. The Pre-Musalman period (by K.R. Rangaswamy suergon)

# நாணயங்கள் - ஓராய்வு

லயன் தமிழ்ப்பொறியாளர் **சு. குழந்தைவேல்**
வாழ்நாள் உறுப்பினர்,
சோழ மண்டல நாணயவியல் கழகம்.

**நாணயம் - வாழ்வியல் பொறி**

நாணயம் = நாண் + அயல். அயல் - நீர்சூழ்ந்த நிலப்பகுதி. - பூமி அயனம் - சூரியன்; சூரியனை மையமாகக் கொண்டு, பூமியின் சுற்றுப்பாதை அயனச்சுற்று அல்லது அயனசலனம் எனப்படும்.

நாண் = குறுக்கம்; விட்டம். - பூமியின் குறுக்கம்.

புவியெங்கும் மக்களிடையே சுழன்று, உருண்டோடிவரும் மதிப்புமிக்க வாழ்வியல் பொறி நாணயம்.

'நாணயம்' எனும் சொல் வாக்கு பிசகாமை எனும் மனிதப்பண்பையும், மனித வாழவுக்கு அடிப்படைத் தேவைகளான ஊண், உடை, உறையுள் இவற்றை உரிமையுடன் உடைமையாக்கிக் கொள்ள, மனிதருக்கு உதவுகின்ற, உரிய மதிப்பால் அளக்கப்டும் வலிமைமிக்க கருவியுமாகும்.

ஒரு நாட்டின், அனைத்து வளப்பெருக்கத்திற்கும் அடித்தளமாய் அமைந்திருப்பது அந்நாட்டின் பொருளாதார நிலை.

பெரும் பொருளால் பெட்டக்கதாகி அருங்கேட்டல்
ஆற்ற விளைவது நாடு (- குறள் 732 - நாடு)

என்பது திருவள்ளுவர் காட்டும் நெறி.

மிகுந்த பொருள் வளமும், நிலவளமும், மக்களனைவரும் விரும்பும் நன்மையும், துன்பமே இல்லாத இன்பமும், இவற்றை அளப்பறியப் பெற்றுள்ள மக்கள் வளமும் உடையதே நன்னாடு என்று போற்றப்படும்.

**நாணயம் - வணிகப்பொறி**

மிகுந்த பொருள் வளத்திற்கு அடிப்படைத் காரணங்களுள் 'வணிகவளமும்' முதன்மையானது.

யவனர், சீனர், ஈழர், கடாரர்,அராபியர் என எண்ணற்ற நாட்டினர் பண்டைத்தமிழக வணிகத்தில் மனநிறைவும், ஆர்வமுங்கொண்டு தமிழக துறைமுகங்களான கொற்கை, தொண்டி, முசிறி, பூம்புகார் வந்து அகில், சந்தனம், மிளகு, வெற்றிலை, முத்து, தந்தம் பெற்றுக்கொண்டு மாற்றாக வைரம், நவரத்தினங்கள், புரவிகள் கொடுத்துச்சென்றனர்.

சங்ககால வணிகத்தில் 'பண்டமாற்று முறை' எனும் வணிகமுறை இருந்தது. சங்க கால வணிகங்கள், கூலவணிகம் (பல பண்டங்கள் விற்பனை) தைல வணிகம் (எண்ணெய் விற்பனை), உப்பு வணிகம், பொன் வணிகம், அறுவை வணிகம் (துகில், ஆடை விற்பனை) கடல் வணிகம் (கடல் சார்புபகுதியில் பண்டங்கள் விற்பனை ) என பன்வகைப்பட்டன. இவற்றை முறையே கூலவணிகர், உமணர் (உப்பு), பொன்வணிகர், அறுவை வணிகர், அறுமர் (எண்ணெய்) மாநாய்கர் (கடல் சார்பு பண்டங்கள்) என்றழைக்கப்பட்டவர்களால், உள்நாட்டு வணிகம் சிறப்பாக விளங்கின.

பண்டைய வணிகத்தில், பண்டமாற்றுமுறையில், முதன்மைக் கருவியாக 'பசு' பயன்படுத்தப்பட்டது என்பது வரலாறு குறிப்புகளிலிருந்து அறிய முடிகிறது. அண்மைக்காலங்களிலும், ஊரகப்பகுதியில் வாழும் மக்கள் நகரத்தினின்றும் மிக தொலைவில் கிராமங்கள் அமைந்துள்ள நிலையில், பண்டமாற்று முறையில் பருப்புக்கு மாற்றாக அரிசியும், உப்புக்கு மாற்றாக வெந்தயம், கடுகு, மிளகு போன்ற சமையல் பண்டங்களையும் பெற்றுக் கொண்டிருந்தனர் என்பதை அறிவோம்.

பண்டமாற்று முறை வணிகம், கிராமப்பகுதிகளுக்குமட்டுமே பொருந்தும். நகரப்பகுதிகளுக்கு பொருந்தாது. இந்நிலையில் பண்டமாற்று வணிகத்தில் பரிவர்த்தனை செய்யப்படும் பொருள், அதன் அளவு, மதிப்பு இவைபற்றி மனித அறிவு வளர்ச்சியில் ஏற்பட்டு, ''மதிப்பீட்டு அளவுகோல் "(BASIC UNIT FOR ESTIMATION

OF COMMODITIES) என்றும் ஒருமித்த முடிவு ஏற்பட்டு, நாணயத் தோற்றத்திற்கு வழிவகுத்தது.

**நாணயம் - ஆக்கல் அரசுரிமை:**

தொடர்ந்த காலமாற்றத்தால், 'பசு' பண்டமாற்று முறை ஒரங்கட்டப்பட்டு, தங்கம, வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம் போன்ற கனிமங்கள் வணிகத்தில் இடம்பெற்ற பின்னர் 'நிறுத்தல் அளவை' எனும் அலகினை கடைப்பிடித்தனர்.

தங்கம் ஆரம்பகாலத்தில் துண்டுகளாகவும், கட்டிக்ளாகவும் நிறுத்து விற்பனை செய்யப்பட்டதின் வளர்ச்சியாக, குறிப்பிட்ட அளவுகளில் குறிப்பிட்ட எடையில் சிறு துண்டுகளாக்கி, அவற்றை மக்கள் அங்கீகரிக்கும் வகையிலும், நாடெங்கும் அங்கீகாரம் பெற்ற மதிப்பில் உரிமையுடன் மக்களிடையே நாணயம் புழக்கத்தில் இருக்கும் வகையிலும், முத்திரைச் சின்னங்கள் பதித்து, நாணயங்களை அச்சிட்டு வெளியிடும் உரிமை, அரசுக்கே சிறப்புரிமையாக அமைந்துவிட்டது.

அரசின் உரிமையினை செயலாக்கமிடுதலின் வளர்ச்சியாக, கருவூலங்கள் ஏற்படுத்தப்பட்டன. அவை நாணயங்களின் கஜானாக்கள் ஆகின.

**நாணயம் - செலவாணித் துவக்கம்:**

அரசின் நிதியாதார வளர்ச்சிக்கு முதுகெலும்பாய் அமைந்துள்ள உள்நாட்டு வணிகம் வளரவும், பன்னாட்டுடன் தொடர்பு கொண்டு, வணிகம் பெருக்கவும் முதன்முதலாக கி.பி. 700 - இல் கிரேக்கநாட்டின் 'லிடியா' பகுதியில் நாணயம் செலாவணியாக அறிமுகப்படுத்தப்பட்டதாக ஒரு உலகவரலாறு குறிப்பு உள்ளது.

மற்றொரு வரலாற்றுக் குறிப்பின்படி, இந்தியாவில் மகாபாரதயுத்தம் நடைபெற்ற கி.மு 12 - ஆம் நூற்றாண்டுக்குப்பின், கி.பி. 11-ஆம் நூற்றாண்டில், அன்றைய அதிகாரத்திலிருந்த 'ஜனபதங்கள்' எனும் சிற்றரசர்களும், 'மகாஜனபதங்கள்' எனும் பேரரசர்களும் நாணயத்தை பயன்படுத்தினர் என்பது அறியமுடிகிறது. இவை அனைத்தும் உலோகத்தில்தான் இருந்தன.

அணிகலன்கள் செய்யப் பயன்பட்ட தங்கம், நாணயம் செய்ய முதன முதலில் கி.மு. 6-ஆம் நூற்றாண்டில் பயன்படுத்தப்பட்டது. வெள்ளி நாணயங்கள் கி.மு. 1-ஆம் நூற்றாண்டு வரை புழக்கத்தில் இருந்திருக்கின்றன. கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் வெள்ளி நாணயங்கள் தயாரிப்பது கைவிடப்பட்டது. மௌரியப் பேரரசு ஆட்சிக்கு வந்தபின்னர், செம்பு உலோக நாணயங்கள் தயாரிக்கப்பட்டன. வணிகத்திற்கென்றே தங்கம், வெள்ளி நாணயங்கள் செலாவணியில் இருந்தன.

**நாணயங்கள் - முன்னோடி நாடு:**

உலக நாகரிகங்களில் முன்னிலை வகிக்கும் இந்தியா மற்றும் சீன நாடுகளுள், ஒப்பிடுகையில், சீனநாட்டில் நாணயம் தோன்றுவதற்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்பே, இந்தியாவில் நாணயங்கள் தோன்றி, செலாவணியில் இருந்தன என்பதை அறிய பெருமையாக உள்ளது.

தொடக்கத்தில் நாணயங்கள் பல்வேறு உருவங்களில், முட்டை வடிவம், சதுரம், செவ்வகம் என வெளியிடப்பட்டன. நிலவரை, நீள் பயணம் மேற்கொண்டு, உருண்டு உலகை வலம் வரும் இந்நாணயம், உருவ அமைப்பின் வளர்ச்சியில், வட்டவடிவில் அமைக்கப்பட்டது.

**நாணயங்கள் - முத்திரைகள்:**

இந்தியாவில் முதன்முதலில் வெளியிடப்பெற்ற நாணயங்கள், முத்திரை நாணயங்களே. இவற்றிற்கு ஆதாரங்களாக மதுரை வைகையாற்றுத் தடத்திலும், கரூர் அமராவதியாற்றுத் தடத்திலும், திருகோவலூர் தென்பெண்ணையாற்றுத் தடத்திலும், காவேரியாறு துறைமுக சங்கமம் பூம்புகார் பட்டினத்திலும், தெற்கே திருநெல்வேலி மாவட்டத்தில் சில பகுதிகளிலும், நாணயப்புதையல்கள் கிடைத்துள்ளமையிலிருந்து அறியமுடிகிறது.

முத்திரை நாணயங்களில், பண்டைத்தமிழ் வழிபாட்டு வணக்கத்திற்குரிய சூரியன், ஐவகை நிலங்களுள் முதலாவதான குறிஞ்சிக்குரிய மலைகள், ஞானம், ஆன்மீகம், வீரம் இவற்றை எடுத்துக்காட்டும் போதி, மருதம், வேம்பு போன்ற அமைப்பு மரங்கள், மக்கள் வணங்கிய அரசர்கள், ஆன்மீக வித்தகர்கள்

ஆகியோரைச் சுட்டும் மனித உருவங்கள், இறையுணர்வுடன் வணங்கிய பாம்புகள், மீன்கள், அழிந்து அரிதாய் காணப்படும் மிருகங்களைக் காக்கும் கடமையை மக்களுக்கு அறிவுறுத்தும் வண்ணம் வெளியிடப்பட்ட முயல் போன்ற உருவங்கள், மங்களச் சின்னங்கள் சங்கு, சக்கரம் சூலாயுதம், போர்ப்படைக்கலங்கள் வில், அம்பு போன்றவை பொறிக்கப் பட்டிருந்தன என்பதை அறியமுடிகிறது.

**நாணயங்கள் - மன்னர்கள்:**

முத்திரை நாணயங்களில் குறிப்பிடத்தக்கவை, பெருவழுதிப் பாண்டியன், சேரன் கொல் இரும்புறையன், சேரன் கொல்லிமலை பொறையன், சேர மன்னன் மாக்கோதை, சேர அரசன் குட்டுவன் கோதை ஆகிய மன்னர்களின் நாணயங்கள், கோதை மன்னர்களின் நாணயங்கள் வெள்ளியிலானவை. இவை சங்கமருவிய தொடக்கக்காலமாகிய கி.பி. முதலாம் நூற்றாண்டுக் காலத்தவை. மற்றையவை செம்பு நாணங்கள். இவை கி.பி. 2-ஆம் நூற்றாண்டு காலத்தவை. இதே நூற்றாண்டைச்சேர்ந்த சங்ககாலயிறுதி, சோழமன்னர்களின் செம்பு, ஈய நாணயங்கள் கிடைத்திருப்பினும், அவற்றில் மன்னர்களின் பெயர்கள் இடம்பெறவில்லை.

**நாணயங்கள் - தஞ்சை சோழமன்னரகள்:**

தென்னிந்தியப் பகுதியில், தமிழகத்தை ஆண்ட சோழப்பேரரசர்கள் தரமான, வெள்ளி நாணயங்களை, சின்னம் பொறித்த முத்திரையுடன் முதன்முதலில் மக்களிடையே புழக்கத்திற்கு விட்ட பெருமை உடையவர்கள் என வரலாறு கூறுகிறது.

முதன் முதலில் வெள்ளி நாணயத்தோடு, தங்க நாணயங்களையும் வெளியிட்ட பெருமைக்குரியவர் உத்தமச்சோழர். இவரது காலநாணயங்களில் முன்புரம் 'உத்தமச்சோழர்' எனும் பெயரும், பின்புறம் குடை, வெண்சாமரங்கள், குத்து விளக்கு, வில், இருமீன்கள், படுத்திருக்கும் புலி ஆகியவற்றுடன் ஒரு கோடும் உள்ளன.

திருமறைக் கண்ட சோழர், மாமன்னர் இராஜ இராஜசோழன் (கி.பி. 986-1016) காலத்தில் வெளியிடப்பட்ட தங்கம், வெள்ளி நாணயங்களிலும் மேற்கூறப்பெற்ற சின்னங்களுடன், அவரது பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன.

கங்கைகொண்ட சோழர், இராஜேந்திர சோழன் வெளியிட்ட நாணயங்களில், தந்தை காலத்திய சின்னங்களுடன் 'ஸ்ரீ இராஜேந்திரன்' எனும் பெயருடன், 'கங்கை கொண்ட சோழன்' எனும் கீர்த்திப் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. கங்கை கொண்ட சோழர், தமது திருமகளுக்கும், சாளுக்கிய மன்னன் இராஜ இராஜ நரேந்திரருக்கும்( கி.பி. 1020-1060) நிகழ்ந்த விவாகத்திற்கு நன்கொடையாக வழங்கிட்ட வெள்ளி நாணயங்களில் முன்புறம் புலி, உடைவாள் சின்னங்கள் மறுபுறம் 'இராஜாதி இராஜன்' எனும் சிறப்புப் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன. சிறிய மதிப்பில், 'ரா' எனும் எழுத்துமட்டும் பொறிக்கப்பட்டுள்ள நாணயங்களும் கிடைத்துள்ளன.

முதலாம் இராஜ இராஜன், செம்பு, மற்றும் மாற்றுக்குறைந்த தங்கம், வெள்ளி நாணயங்களும் வெளியிட்டுள்ளார். அவற்றில் முன்புறம் அரசர் நின்ற வண்ணமும், பின்புறம் மன்னன் இருந்தவண்ணத்தில் கையில் சங்கும், புலி மன்னரைப் பார்க்கும் வண்ணமும் பொறிக்கப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட சின்னங்களுடன் 'ஸ்ரீ குலோத்துங்கன்' என்ற பெயர் பொறித்த நாணயங்களும், 'ஸ்ரீ லங்கேஸ்வரர்' என்ற சிறப்புப் பெயருடன் கூடிய நாணயங்களும் வெளியிடப்பட்டன.

**நாணயங்கள் - நாயக்கர் மன்னர்கள்:**

தென்னிந்தியாவில் கி.பி. 1366 முதல் கி.பி. 1566 நிறைவாக, 200 ஆண்டுகள், விஜயநகர மன்னர்களின் ஆட்சி, மூன்று தலைமுறைகளாக நிலவி வந்த காலத்தில், தங்க நாணயங்களை, மக்களிடையே புழக்கத்திற்கு விட்டனர். இரண்டாம் தேவராயமன்னர் கி.பி 1425-இல் வெள்ளி நாணயங்களை 4 தானிய மணிகள் எடையில், இந்துக்கடவுளர் உருவங்கள் பொறிக்கப்பட்டு வெளியிட்டார். இந்நாணயங்களின் அமைப்பே, பிற்காலத்தில்

ஆங்கிலேயர் 'பக்கோடா' எனும் நாணயங்களை வெளியிட உதவியது.

விஜயநகர மன்னர்களில் ஹரிஹரர் மற்றும் புக்கர் தொடங்கி (கி.பி. 1366) சதாசிவராயர் வரை (கி.பி. 1566) வைணவத் தெய்வங்களின் உருவங்களையும், குறிப்பாக அனுமான், கருடன் சின்னங்களையும் பொறித்து நாணயங்கள் வெளியிட்டனர் என்பதை அறியமுடிகிறது.

இடைப்பட்ட காலத்தில் (கி.பி. 1486 - கி.பி. 1566) சாளுவ மற்றும் துளுவ வம்ச மன்னர்கள் சைவ இறைவன் - இறைவிலர் உருவங்களையும், நந்தியையும் சின்னமாக்கி முத்திரை நாணயங்கள் வெளியிட்டனர்.

விஜயநகர பேரரசுக்குப்பின், பிற்கால நாயக்கர்கள் ஆட்சி தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய பகுதிகளில் பரவியிருந்த காலத்தில் வெளியிட்டிருந்த நாணயங்களில் ஸ்ரீ 'வீர' எனும் வாசகம் பூ பக்கத்திலும் (பின்புறம்), அனுமார், யானை, காளை, சூரியன், சந்திரன் உருவச்சின்னங்கள் தலைப்பக்கத்திலும் (முன்புறம்) பொறிக்கப்பட்டுள்ளன.

**நாணயங்கள் - மதங்கள்:**

கி.பி 2-ஆம் நூற்றாண்டில் இந்தியாவை ஆண்ட குஷானர்கள் ஆட்சிக்கால நாணயங்களில் கிரேக்கத் தெய்வம் மற்றும் சைவ கடவுளர்கள் சிவன், பார்வதி உருவங்கள் பதிக்கப்பட்டுள்ளன.

கனிஷ்கர் ஆட்சிக்கால நாணயங்களில் புத்தரின் முழு உருவம் பொறிக்கப்பட்டுள்ளதை அறிய முடிகிறது. குப்தர்கள் ஆட்சிக்காலத்தில் நாணயங்களில் முப்பெருந்தேவியர் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

மகா அக்பர், தமது ஆட்சிக்காலத்தில் இராமன் - சீதை உருவங்கள் பொறிக்கப்பட்ட நாணயங்களை வெளியிட்டார்.

பன்முறை இந்தியாவில் படையெடுத்துவந்த, முஸ்லீம் மன்னர் கஜினி முகமது சமஸ்கிருத மொழியில் கலிமாவையும், மன்னர் முகமதுகோரி தேவிலட்சுமியின் உருவத்தையும், தங்களது ஆட்சிக்காலத்தில் நாணயங்களில், பொறித்து வெளியிட்ட சான்றுகள்

கிடைத்துள்ளன. 'கலிமா' பெயரை நீக்கி, 'தீரம் ஷராய்' எனும் நாணயங்களை ஔரங்க சீப் வெளியிட்ட சான்றும் கிடைத்துள்ளன.

மேலும் இஸ்லாமிய மன்னர்களின் ஆட்சி இந்தியாவில் நிலவிய பொழுது, நாணயங்கள் அரேபிய மற்றுமு பாரசீக மொழிகளில் அமைந்த வாசகங்கள் பொறித்து வெளியிடப்பட்டன.

**நாணயங்கள்-இஸ்லாமியர் ஆட்சியில் இந்து சிற்றரசர்கள்:**

இஸ்லாமியர் ஆட்சிக்காலத்தில், சிறு நாடுகளை ஆண்டுவந்த இந்த சிற்றரசர்கள் தங்கள் ஆட்சிக் குட்பட்ட பகுதியில், தங்களாட்சியைக் குறிக்கும் நாணயங்களை வெளியிட்டனர்.

இந்து சிற்றசர்களின் பட்டியலில், சிந்துசமவெளியை ஆண்டுவந்த 'கங்ரா' அரசர்கள், இராஜஸ்தான், மேவார் அரசர்கள், கோசலம்,அகாரம் பகுதியின் அமரக்கண்டம் பகுதியை ஆண்ட 'கோண்டு' அரசர்கள், பீஹார் வடபகுதியில் மிதிலையை ஆண்ட மாணிக்யர்' அரசர்களும், 'அகோம்' இன அரசர்கள், 'கூச்' இன அரசர்கள், 'கச்சாரி' இன அரசர்கள், 'ஜெயந்திய' இன அரசர் முதலான (ஹவு' இனத்து) அரசர்கள் மிக முக்கியமானவர்கள். இவர்களின் காலம் கி.பி. 14. ஆம் நூற்றாண்டுமுதல் கி.பி. 17-ஆம் நூற்றாண்டு முடிய, நிறைவானது.

இச்சிற்றரசர்கள், தங்களாட்சிக்குட்பட்ட நாணயங்களில் ஆளும் அரசர்களின் பெயர்கள், குதிரைவீரன், காளை, சிங்கம், ஆட்சிக்காலக்குறிப்புகள், அர்த்தநாரீஸ்வரர், குழலூதும் கிருஷ்ணன், திர்சூலம்,தெய்வ வழிபாட்டு வாசகங்கள் ஆகியன பொறிக்கப்பட்டுள்ளன.

**நாணயங்கள் - உறவுகள் வளர்த்தன:**

கி.பி 11-ஆம் நூற்றாண்டில், முதலாம் இராஜ இராஜன் ஆட்சிக் காலத்திய நாணயங்களில், சாளுக்கிய வம்ச மன்னர்களின் சின்னமான காட்டுப் பன்றியும், நாணயத்தின் ஓரத்தில் இராஜராஜர்' என்றும் பெயரும் பொறிக்கப்பட்டுள்ளன.

சாளுக்கிய மன்னன் சக்திவர்மன் காலத்திய நாணயத்தில், 'ஸ்ரீ சூல நாராயணர்' என்னும் பெயரும், காட்டுப்பன்றி உருவமும், 'ஸ்ரீ

சால் குராயனர்' என்னும் பெயருள்ள நாணயத்தில் புலியும் பொறிக்கப் பட்டுள்ளன.

சோழ மன்னர்களின் புலிச்சின்னம் பொறிக்கப்பட்டுள்ள, நாணயங்களில் சாளுக்கிய மன்னன் 'முதலாம் சக்திவர்மன் பெயரும், சாளுக்கிய மன்னர்களின் காட்டுப்பன்றி சின்னம் பொறிக்கப்பட்டுள்ள நாணயங்களில் 'முதலாம் இராஜ இராஜன்' சோழர் பெயரும் பொறிக்கப் பட்டிருக்கும் நிலை, இருவேறுபட்ட வம்சத்தாரிடையே, பெண் கொடுப்பதும், எடுப்பதுமான நெருங்கிய உறவுமுறையால் ஏற்பட்டநிலை, நாணயத்தால், நம்மை வியக்கவைக்கின்றன.

**நாணயம் - ரூபாயானது:**

மௌரிய சந்திரகுப்தர் காலமாகிய கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் கௌடில்யர் எழுதிய அர்த்த சாஸ்திரத்தின் வாயிலாக் ரூபாய்' எனும் பெயர், நாணயத்திற்கு ஏற்பட்டதை உணரமுடிகிறது.

சந்திரகுப்த மௌரியரின், நிதியமைச்சர் வெள்ளியை 'ருப்யா ரூபா' எனவும், தங்கத்தை 'சொர்ண ரூபா' எனவும், ஈயத்தை 'சிசா ரூபா' எனவும் செம்பினை 'தாமிர ரூபா' எனவும் வழங்கியதான குறிப்பினைத் தொடர்ந்து, 'ரூபா' எனும் திருப்பெயர், நாணயத்திற்கு வழக்கத்தில் வந்தது என்கின்றனர் தொல்லியற்றுரையினர்.

**நாணயங்கள் - சேகஉமீப்பளார்சங்கம்:**

